Regd No. M. 4900.

16-பக்கங்கள்.

# குடி அரசு

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0 ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 5-3-1949 சனிக்கிழமை } மலர் 26.

## மறந்தா போனார்?

[ "வாணிதாசன்" ]

உலகினில் கல்லும் மண்ணும்
உண்டான காலந் தொட்டு
நிலைபெற்ற தமிழே உன்னைத்
தொலைத்திட நினைக்கின் றார்கள்!
அலைஅலை யாக வந்த
திராவிடர் அணிவ குப்பை
மலைநிகர் தோளைத் தால
முத்தனை மறந்தா போனார்?

இமயமும் சிலம்பும் இன்று
திராவிடர் சினத்தைக் காட்ட
அமையாதோ? பின்னும் ஏனோ
அழுகிய முட்டை இந்திச்
சுமையேற்ற நினைக்கின் றார்கள்!
திராவிடர் தோளை நெஞ்சை
நமதரும் சக்ர வர்த்தி
நாளைக்கும் சொல்லு வாரே!

திராவிட நாட்டில் அன்று
தீந்தமிழ் மொழியைக் காத்த
திராவிடத் தந்தை இன்றும்
இருக்கின்றார்; சாக வில்லை,!
திராவிடம் திராவி டர்க்கே!
தீந்தமிழ் மொழியைச் சாய்க்க
உருவாகும் சிறுது ரும்பும்
உதைபடும்; சொன்னோம்! சொன்னோம்!

கற்பனை.

# சீதையின் கற்பு!

★

அடியே கனகம்! எவ்வளவு நேரம்? மனுஷனுடைய நிலையை கொஞ்சங் கூடத் தெரிந்து கொள்ளாமே....

எல்லாந் தெரியும். நேரம் போகல் லேன்னா, அந்தக் கோபால கிருஷ்ணனைத் தியானம் பண்ணிண்டிருங்கோ.

அவனை நினைச்சு நினைச்சுத் தாண்டீ இந்த வேகமெல்லாம். வாடியின்னா......

ஏது, இதே தொல்லையாப் போயிடுத்து? மணி 9 கூட இன்னுமாகல்லேயே!

ஏண்டி! உபதேசமா பண்றே...

பிறகு விளக்கு அணைகிறது, கனகத்தின் கரத்தால்.

ஏண்டீ! குழந்தே வேணும் வேணுமென்னெயே' சமயா சந்தர்ப்பம் தெரிந்து நடந்துக்க வேண்டாமோ?

அதுசரி, குழந்தைக்கு என்ன பெயர் வைக்கறதுன்னு யோசனை பண்ணிருக்கீங்கோ.

'கோபாலன்' என்று வைக்கலாமா.

பெண் குழந்தை வேண்டுமென்றல்லவா பிரார்த்திட்டிருக்கேன். பங்களாவுக்கு "ராஜலக்ஷ்மி நிலயம்" என்று நாமம் வைத்தது மிதற்குத் தானே.

ஹா......உங்க வேலையைக் காட்ட ஆரம்பித்துட்டீங்களே! இவ்வளவு பலமாகவா கிள்ளறது.

சின்ன குழந்தேயல்ல நீ! வாயிலே விரலை வைத்தாக்கூட கடிக்கத் தெரியாது; அதனால்தான் இப்படி வந்து இடிக்கிறேயாக்கும்.

பெண் குழந்தேதானே?

ஏண்டீ, உன்னைப் போலவே நம்ம பெண்களெல்லாம் நினைச்சுப் பெற்றெடுத்திட்டா, பிராமணர்களுக்குப் பஞ்சம் வந்துடுமே.

அதுக்கெல்லாம் நீங்கள் வருத்தப்பட வேண்டாம்; அந்த காலத்திலே சீதைக்கு ஒரு விபீஷணன் கிடைத்த மாதிரி, சில விபீஷணர்கள் இந்த நாட்களில் நமக்குக் கிடைக்காமெ போயிடமாட்டா.

சீதையை ஏண்டீ இழுக்கிறே; அவள் ஜனக மஹா ராஜாவுக்குப் பிறந்த புண்ணியவதியாச்சே!

'அரசனும் ஆண்டியும் நமக்கு எல்லாரும் சமம்' என்று அன்னைக்கு எடுத்துச் சொன்னீங்களே?

ஒரு ராஜ தந்திரத்துக்காகச் செய்து கொண்ட ஒப்பந்தமடி அது. சீதையை விபீஷணனுடன் கூட்டி வைக்க ஒப்புக் கொண்டு அதன்படி செய்யல்லேன்னா, அந்த திராவிடனை வென்றிருக்க முடியுமா! விபீஷணன் சீதையோட சேரல்லென்னா லவ குசர்கள் எப்படியடி பிறந்திருப்பார்கள்?

இதை என் கதையிலே எழுதல்லே.

இந்த விசேஷங்களை யெல்லாம் எழுதியிருந்தா இந்த சூத்திரப் பசங்களெல்லாம் இதிகாசபுராணங்களை நம்புவாங்களாடீ. ஏண்டீ இந்த சந்தேகமெல்லாம் கிளப்பறே.

ஏன், நாங்கூடத் தெரிந்து கொள்ளக் கூடாதாக்கும்.

அதுக்கு இன்னும் காலம் வர்லேடி, தமிழனை ஏமாத்திப்புட்டோமோ, அப்புறம் நம்ம ராஜ்யம்தான். இன்னும் சில நாள்பொறு, விவரமா சொல்லறேன்.

என்னிடம் மாத்திரம் ரகஸ்யமா சொல்லுங்கோ. நான் யாரிடமும் சொல்லல்லே.

சத்தியமாச் சொல்மாட்டேயே.

சத்தியமாகச் சொல்லறதில்லே.

அப்படியானால் ஊ...... இன்னும் நெருங்கு. யாருக்காவது கேட்டு விடப் போறது.

* *

ஆரியருக்கும் திராவிடருக்கும் நடந்த எந்தப் போராட்டத்திலும் ஆரியர் நேர்முகமாகக் கலந்து கொள்ளவேயில்லை. திராவிடர்களைத் தனித் தனிக் கும்பலாகப் பிரித்து வைத்தனர். பிரிக்க முடியாது, வெல்ல முடியாதவர்களை அழகான ஆரியப் பெண்களைப் பொறுக்கி யெடுத்து, அவர்களிடம் அனுப்பி, முக்கியமாக அவர்களின் சிற்றரசர்களிடம் அனுப்பி, தந்திரமாக அவ்வரசர்களின் அந்தப்புர அணங்குகளாக்கி, அவர்கள் தம் மனைவிமார்களை வெறுக்கும்படி செய்தனர். இம்முறையைக் கையாளவே அவ்வரசர்களுக்கு நல்ல சந்ததிகள் உற்பத்தியாகவில்லை. அப்படியே பிறந்து விட்டாலும் வஞ்சகமாக முளையிலேயே கிள்ளி விட்டு வந்தனர். இம்முறையில் வாளேந்திய வீரர்கள் வஞ்சனையான நோக்கங்கொண்ட வேதியர்களுக்கு அடிமையாக்கப்பட்டனர்.

ஏமாறாதவர்களை எய்ப்பதற்கும், வெல்லுவதற்கும், அத்திராவிடரின் உறவாய் உதவியில் நிலைப்பதற்கு, அவர்களை ஆரிய இனத்தொழியல— மானத்தைவிட வாழ்வே மேலானது என்ற இழி நடத்தையை, செய்கையில் காட்டுவதில் பழக்கப்பட்ட பார்ப்பனப் பெண்களைக் கொண்டு மயக்கி, அவ் விபீஷணர்களைக் கொண்டே நேர்மையுடன் அரசோச்சி வந்த, பல சிற்றரசுகளை வீழ்த்தினர்.

இவைகளைச் செய்து முடிக்கப்பல ஆண்டுகள் பிடித்தன. இருந்தாலும் முழுதும் பூர்த்தி அடையவில்லை. தெற்கே வசித்து வந்த திராவிடர்கள் எவரும்ஏமாறாமல், ஆரியப்பெண்களையே வேசிகள் எனக்கருதி, அவர்களை சிற்றின்பப் பொருளாக உபயோகப் படுத்திக்கொள்ளாததுதான் காரணம். தம்முடைய ராஜதந்திரத்தினால்பாரத காலத்திற்குப் பிறகு அடிமைப்படுத்தினவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள், விபீஷணன், சுக்ரீவன் ஆகிய இவர்களே.

கிட்கிந்தையின் தலைவனாகஇருந்த வாலியை, வஞ்சனையாகக்கொல்ல, அவன் இளையவன் சுக்ரீவன் உடந்தையானான். (வாலியைச் சுக்ரீவன் கொல்லாதது சகோதர பாசமோ) வாலியும் கொல்லப்பட்டான்; அண்ணனுக்குத் துரோகம் செய்து ஆரிய இராமனுக்குக் காட்டிக் கொடுத்த சுக்ரீவன், அவன் அடிமையாக இருந்து, இராமன் தன் எதிரிகளுடன் போர் செய்யும் காலங்களில் படையும் பொருளும் உதவி, மற்ற வசதிகளும் செய்ய ஒப்புக்கொண்டது, ஆரியர்களின் மகத்தான முதல் வெற்றி.

இதற்கு முன்பே இராவணனின் தங்கை சூர்ப்பனகையைப் பார்த்து விட்ட, சிற்றின்பத்தில் பிரியனான இராமன், அவளை அடைய எண்ணினான். அவள் மறுக்கவே, தன் தம்பி இலக்குமணனையாவது கல்யாணம் செய்து கொள்ளும்படி சொன்னான். சீதை, பிறகு தன்னை வெறுக்க ஆரம்பித்து விடுவாள் என்று எண்ணிய இலக்குமணன் அதற்கு இசையவில்லை. சீதையைவிட அழகாகவும், வசீகரமும் பொருந்தியிருந்த சூர்ப்பனகையை, அவள் திராவிடப்பெண் என்பதற்காக மூக்கையும் முலையையும் அறுத்து அவமானப்படுத்தினர், அவள் நிராயுதபாணியாக இருந்த பொழுது. அவமானப்படுத்தப்பட்ட சூர்ப்பனகை, மானமிழக்கப்பட்டுவிட்ட காரணத்தால் தன்னை மாய்த்துக் கொண்டாள். இதையறிந்து, திராவிடரின் தன்மானத்தையே சோதித்த ஆரிய இராமனைப் போருக்கழைக்கப் புறப்பட்டான், தென் இலங்கை வேந்தன் இராவணன்.

இராமன் இறைச்சிக்காக மான் வேட்டையாடச் சென்றிருந்தபோது, இலக்குமணனும், அவர்களுக்குக்

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)




## காட்சி 40.

[வீதி.]

உறுப்பினர்கள்:- சிதம்பர முதலியார், இராஜன், வேவா.

கதை அமைப்பு:- [சிதம்பர முதலியார் தன் தவறுதலை உணர்ந்து வருந்தி இராஜனிடம் மன்னிப்புக் கோருகிறார்.]

முதலியார்:- அப்பா! நீங்கள் இருவரும் என்னை மன்னிப்பீர்களா? நான் செய்த குற்றம் மன்னிக்கத் தகாததுதான்! என் மனச் சாட்சி என்னோடு போராடிக் கொண்டிருக்கும்போது, அந்தச் சண்டாளப் பாதகி பத்மாவும், விமலாவை மணந்த விஸ்வனும் என் மனச் சாட்சியையே மாய்த்து விட்டனர்.

அய்யோ.......! நான் கண்ணிருந்தும் குருடனானேனே...உள்ளமிருந்தும் உணர்ச்சியற்ற கல்லானேனே......என்னை மன்னிக்க மாட்டீர்களா...?

இராஜன்:- நடந்தது நடந்து விட்டது! கடந்ததை மறந்து இனி நடப்பதை அல்லவா கவனிக்கவேண்டும்? வருந்துவதில் யாது பயன்? உம். விமலாவின் கதிதான் என்ன ஆகுமோ தெரியவில்லை......?

முதலியார்:- எல்லாத் தீவினைகளுக்கும் நானேதான் காரணம்...

வேவா:- முதலியார்வாள்! துக்கப்படாதீர்கள். உங்கள் குற்றத்தை நீங்கள் உணர்ந்துவிட்டீர்கள்! இனிக் கொஞ்சம் துணிச்சல்தான் தேவை! உடனே பரிகாரம் பண்ணிவிடலாம்!

முதலியார்:- நீங்கள் பார்த்து இனி என்ன செய்யச் சொன்னாலும் சரி! அப்படியே செய்கிறேன்.

வேவா:- அப்படியானால், வீட்டிற்குப் போய் மற்றவைகளைக் கவனிக்கலாம் வாருங்கள்!

## காட்சி 41.

[முதலியார் வீடு.]

உறுப்பினர்:- சிதம்பர முதலியார், இராஜன், வேவா, பத்மா, விமலா.

கதை அமைப்பு:- [இராஜனின் தெரிசன விமரிசனத்தால் விமலாவுக்கு சித்தப்பிரமை நிவர்த்தியாகி விடுகிறது. சிதம்பர முதலியார் மனமுவந்து விமலாவை இராஜனுக்கு மறுமணம் செய்து வைக்கிறார்.]

முதலியார்:- பத்மா! பத்மா!...!

பத்மா:-யாரது? [என்று கேட்டுக்கொண்டே வந்தவள், இராஜனைக் கண்டதும் ஆச்சரியத்தால் பிரமித்து நிற்கிறாள்.]

முதலியார்:- [பத்மாவைப் பார்த்துவிட்டு] என்னடி...? அப்படியே ஸ்தம்பித்துவிட்டாயே......? ஓகோ ராஜனைக் கண்டதும் ஆச்சரியப்படுகிறாயோ...?

பத்மா:- ஆமா...ங்! இவர் எப்படி விடுதலையானார்?

முதலியார்:- எல்லாம்...[வேவாவைக் காட்டி] ...இவருடைய செயல்தாண்டி...!

வேவா:- 'அவன் செயலன்றித் தான் ஒரு அணுவும் அசையா'தென்பார்களே...?

பத்மா:- அய்யய்யோ! இது துன்றைக்கு வந்த பைத்தியமாதிரியே இருக்கே...?

முதலியார்:- இன்றைக்குத் தாண்டி தெரிந்தது! பெரிய பெரிய திறமைசாலிகளெல்லாம் பைத்திய மாதிரியும் இருக்கலாம் என்று!

பத்மா:- அப்படி இல்லாமலா! உங்கள் மகளும் பைத்தியகாரி மாதிரி இருக்கிறாள்.

இராஜன்:- விமலா எங்கே?

பத்மா:- இவரு ஏன் விமலா எங்கே என்று கேட்கிறார்?

முதலியார்:- கேட்டால் என்னடி? விமலாவின் நிலையைக் காட்டத்தானே இவர்களை இங்கே கூட்டிக் கொண்டு வந்திருக்கிறேன்! சரி சரி! நீபோயி...விமலாவைக் கூட்டிக் கொண்டுவா போ?

பத்மா:- [வீட்டுக்குள் போய் விமலாவை அழைத்துக் கொண்டு வருகிறாள்.]

விமலா:- [நடைப்பிணம் போல் வந்து நிற்கிறாள்.]

இராஜன்:- ஆ! விமலா! உன்னை இந்த நிலையில் காணவோ என் கண்களும் இருக்கின்றன? அய்யோ...! நீ எந்த விதத்திலும் சுகமாக வாழ்ந்தால் போதும் என்ற ஒரே எண்ணத்தினாலல்லவா! நம்முடைய உண்மைக் காதலைத்தியாகம் செய்து உன்பெற்றோரின் பிடிவாதப்படி விஸ்வனையே மணந்து கொள் என்று வேண்டினேன்...! அந்தோ! அதற்காகவா இந்தப் பிரதி பலன்...?

பிள்ளைகளின் வாழ்க்கைக்குக் கொள்ளிவைக்கும் பெற்றோர்கள், தமக்கும் கொள்ளிவைக்கவே பிள்ளை வேண்டும் என்று கோருவாரிந்நாட்டில்! அய்யோ! அநியாயமாக மூளும் இருவகைக் கொள்ளிகளுக்கிடையே...! காதல் கொழுந்து கருகிமடியாது வாழவா செய்யும்? ஆனால், குபேரனை மணந்த நீயேன் வாழவில்லையோ விமலா? விமலா...!! விமலா!!!

வேவா:- உம். ராஜா! துக்கப்பட்டுக் கொண்டே இருப்பதால் ஒன்றும் பயனில்லை! தொடங்கு உன் பழைய காதல் விளையாட்டுகளை! ஒருவேளை, அவைகளே உன் விமலாவின் சித்தப்பிரமையை நிவர்த்திக்கும் மார்க்கமாகவும் இருக்கலாம்!

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

கதை கற்பனை.

சிறுகதை

மூன்றாம் பருவம்

# கருகிய மலர்!

போட்டி

எண் 12.

வானத்தின் எண்ணிறந்த நட்சத்திரங்களில் ஒன்று சிதறிப்போடி விழுந்தது. என் வாழ்வின் எண்ணிறந்த நாட்களின் ஒரு பகுதி என் உள்ளத்தினின்றும் பொறி தட்டி விழுந்தது.

கருகிய மலர் ஒன்று! அல்ல, கருகியதாகக் கற்பிக்கப்பட்டதோர் மலர். மணமுண்டு, மதுவுண்டு ஆனால் நஞ்சென நவிலப்பட்டது. வண்ணமுண்டு, ஒளியுண்டு ஆனால் வளமற்றது என வாயுரை வழங்கப்பட்டது. ஆம்! அவள்-சுசீலா ஒதுக்கப்பட்டிருந்தாள். அவள் தந்தை ஓர் ஏழைப் பிணியாளன். வாழ்வின் வளமற்ற பகுதிக்கு வரையத்தக்கதோர் உருவம்: அது சிந்தியதோர் சிசு சுசீலா. அவள் வறுமையுடன் உழன்றும் ஓரளவு படித்திருந்தாள். அது தேவையற்றது எனச் சமுதாயம் செப்பிற்று. ஆனால்......?

அவள் படித்திருந்ததன் பயன் தான் அவளால் ஓரிடத்தில் பணியாற்ற முடிந்தது. ஆணினம் பல்லோரோடு பணியாற்றுவது பாதத்தை எனப் பட்டம் சூட்ட வாய்ப்பிருந்தது, சமுதாயத்திற்கு. சமுதாயம் கூறுவதிலும் உண்மையற்றுப் போகவில்லை. ஆணினம் செய்வதும்—செய்ததும் அதுதான். எனவே சமுதாயம் அவளைக் கருகிய மலரோடு ஒப்பிட்டதில் தவறில்லை. அவள் வாழ்வும் கருகியதாகத்தான் போகும்—போய்விட்டது.

நான் அவளை முதன் முதலில் கண்டது அலுவலகத்தில்தான். உணர்ச்சியின் ஒய்யாரம் ஒளிந்து எட்டிப்பார்த்தது, சிந்தையும் குழம்பியது.

அன்று அவளுக்காக இருவர் போட்டியிட்டனர். அவள் அவர்களுக்கிடையில் தவித்தாள். கண்களிலே நீர், உதட்டிலே துடிப்பு, உள்ளத்திலே......? அறிய முடியாததோர் சோகச்சுடர் அவள் முகத்திலே, உள்ளத்தின் உணர்வை எடுத்துக் காட்டியது. அவள் வேதனையோடு பேசினாள்.

“உங்களுக்குத் தங்கைமார்கள் இல்லையோ?” சோகத்தின் சொற்கள் சுடரொலித்தன.

இதென்ன கேள்வி! “தங்கைமார் இருந்தால் அவர்களைப் பெண்டாட முடியுமா? அவர்களோடு காமக்கேளிக்கை நடத்த முடியுமா?” யாரும் இங்ஙனம் வினவவில்லை. ஆனால் அவ்விருவர் உள்ளங்களிலும் இப்படிப்பட்ட கேள்வி எழுந்தால்—எழுந்திருந்தால் ஆச்சரியமில்லை. ஆனால் அவள் பேசிய அச்சொற்கள் என்னுள்ளத்தில் ஜீவகளையோடு ஓடியது. கேள்வியின் இழைகள் என்னைப் பின்னின.

“அவள் வாழ்வு கருகித்தான் போக வேண்டுமா? மலர்ந்து ஒளிரச் செய்ய முடியாதா?”

“முடியும்! ஏன் முடியாது?”

“ஆனால் எப்படி முடியும்?”

“அவளை அந்நிலையினின்றும் மீட்டுவிட்டால் ஏன் முடியாது? எப்படி முடியும்?.........மணந்து கொள்!......!!” கேள்வியும் பதிலும் முடிந்துவிட்டன. ஆனால் செய்கையில்...!

என் கருத்தைக் கூறியபோது சுசீலா நகைத்தாள். “நான் உன்னைக் காதலிக்கிறேன்” என்றேன் உணர்ச்சியோடு.

“எல்லோருந்தான்......!” என்றாள்.

“இச்சைக்காகவல்ல!”

“எச்சை உமிழவோ...?”

“இல்லை! உன் மிச்ச வாழ்வில் மகிழ்ச்சி கூட்ட! உன் கருகிய வாழ்வில் இன்பம் கூட்ட! கருகிய மலரைக் களிப்பூட்டுமளவு மறுமலர்ச்சி கொடுக்க!......” அவள் என் உணர்ச்சி உரைகளைக் கேட்டு நகைத்தாள். நகைப்புக்குக் காரணம்?......எனக்குத் தெரியாது. ஆனால் நான் உறுதி கூறினேன்.

நான் அவளைக் கூடுவதற்கு முயற்சிக்கவில்லை. என்னுறுதியை நிலைநாட்ட முயன்றேன். எதிர்ப்புக்கு ஏமாறவில்லை. ஏசலுக்கு மசியவில்லை. ‘மணத்திற்குப் பின்தான் அவளோடு மகிழ்ச்சி?’ உடைந்த உள்ளத்திற்கு இது உறுதி அளிக்கும் என்றே எண்ணினேன்.

நாட்கள் ஓடின.

இடையிலோர் நாள் அலுவலகத்தில் பொருள் பறிபோயின. வழக்கு, மன்றம் ஏறியது. அவள்—சுசீலா மன்றத்தில் நின்றாள்.

“அவளா திருடினாள்!” “ஏன் அதிலென்ன ஆச்சரியம்?”

“எதற்காகத் திருடினாள்?”

“எதற்காகவோ இருக்கட்டும்! ஆனால் ஏன் சமுதாயம் அவளைத் திருடும்படியாக விட்டது?”

இதென்ன பிரச்னையப்பா? என்னுள்ளத்தில் கேள்விகள் உருவெடுத்து ஓடின. ஆனால் விடை... யாருக்காக அந்த விடையைத் தெரிந்துகொள்வது?

சுசீலாவின் தந்தைக்குப் பிணியின் நிலை உச்சம் ஏறியது. வறுமைக்கு வாய்ப்பில்லை, பிணி போக்க பொருளில்லை வைத்தியம் செய்ய! திருடினாள். அவள் தன் உடலினால்—காமக் கேளிக்கையால் பெற்றிருக்கலாம். ஆனால் அது போதாது. மேலும், அவள் வாழ்வை மலரச் செய்ய முயன்ற நான் அவள் அவ்விதம் பொருள் திரட்டுவது நியாயமல்ல என்று எண்ணுவேன் என அவளுக்குத் தோன்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

தோழர்களே!

3ம் பருவத்தில் 12-வது கதை இது!

இன்னும் 1 கதை தொடர்ந்து வெளிவரும்!

☆

எல்லாவற்றையும் படித்து வையுங்கள்!

பின் தீர்ப்புக் கூறுங்கள்!

# சேலத்தில் கூடிய சதிகாரர்!

[☆]

“கள்ளர்கள் வாழவழியில்லாது, வீதியிலே விளக்கு வெளிச்சமும், பாராவுக்குப் போலீசும் போட்டிருக்கும் புல்லர்கள் ஆட்சி அடியோடு அழியட்டும்”—கள்ளர் மாநாட்டு காரசாரமான எச்சரிக்கை என்று செய்தி கண்டால்;

“வயதாகிவிட்டவள்தான் நான்; ஆனால் மேனியின் மினுமினுப்புக் குறையவில்லையே, குழிவிழுந்த கண்களும் கன்னமும்தான் என்றாலும், குட்டிக்கூராவின் கருணையால் குளிர்ந்த முகத்துடன்தானே காட்சியளிக்கின்றேன். எனக்கு ஏன் வரும்படி இல்லை? ஆகவே அழியட்டும் அழகு மங்கையர்”—என்று கிழமான கணிகை கூறினால், குவலயத்தில் நடந்தால், மக்களின் திகைப்பு எந்த அளவிற்கு இருக்குமோ அந்த அளவுக்கு அதிகமாகவே, சென்ற கிழமையில் சேலத்தில் கூடிய சதிமனம் படைத்த பார்ப்பன மாநாட்டிலே பேசப்பட்ட பேச்சுக்களின் பொருளைப் பத்திரிகைகளிலே பார்த்த நேரத்திலே மக்கள் அடைந்திருப்பர்.

உன்னத நிலையிலிருந்த இந்த உபகண்டத்தை ஒழித்துக்கட்டியது இந்த உஞ்சிவிருத்திக் கூட்டம்தான் என்று அறுதியிட்டு மக்கள் இறுதியாகக் கூறிய பின்னர், வாழ்ந்திருந்த நாட்டைத் தாழ்ந்திருக்கும் நிலையினதாக ஆக்கியது ஆரியமே என்று ஆடவரும் பெண்டிரும் அறிந்த பின்னர், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உயரிய தத்துவத்தைக் கடைப்பிடித்த மக்களை மூலக்கடவுள் மூவர், அவர்களின் அருமைப் பத்தினிகள் மூவர், அவர்களுக்குப் பிறந்தவர் ஆயிரவர், அவர்களின் ஏவலர் முப்பத்து முக்கோடி தேவர், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், கின்னரர் கிம்புருடர் முதலியோர் என்று நம்பவைத்து இந்து மதத்தை உண்டாக்கியது இங்கு இழிந்தோர்கள்தான் என்று தெரிந்த பின்னர், ஆதியிலே சாதியற்று வாழ்ந்தோம்; ஆனால் பாதியிலே வந்த நாதியற்ற கூட்டமாகிய வேதியரின் உரை கேட்டதால் வீணரானோம் என்று வெதும்பி மக்கள் உரைத்த பின்னர், நச்சுக் கொள்கைகள் நானிலத்திலே நிலைத்திருக்கக் கூடாது, அவைகள் அழிக்கப்பட்டே தீரவேண்டும் என்ற முழக்கம் மக்களின் காதுகளிலே ஒலித்து உன்மத்தர்களை ஒழித்துத்தான் ஆகவேண்டும் என்ற நிலை ஏற்பட்ட பின்னர் சேலத்திலே மாநாடு கூட்டி “மறையவர்கள்” “மகஜர்” அனுப்பியிருக்கின்றனர் மத்திய சர்க்காருக்கு.

அந்நிய சர்க்காரின் அடிவருடியாவது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ளலாம் என எண்ணும் எத்தர்கள் கூட்டமே! நேருவிடத்தில் கூறியேனும், நேர்மையற்ற உனது கொள்கைகளை குவலயத்தில் குன்றாது இருக்கச் செய்வோம் என்று கருதும் கயவர் கூட்டமே!கேள்! இனி,நீங்கள் இருப்பதாகச் சொல்லும் இறையவனும், மறையவனும் வந்தாலும் உங்கள் ஆதிக்கம் நிலைக்காது! மனு, மாந்தாதிகள் மறைந்திருப்பதை விட்டு வெளி வந்து வேத பாராயணம் செய்த வேதியர்க்கு வேண்டுவதை அளிப்போம் என்றாலும் சரி; அடிக்கடி அவனியிலே தோன்றி ‘துஷ்டநிக்ரகசிஷ்டபரிபாலனம்’ செய்வோம் ‘எனைக்கழன்ற’ வெண்ணெய் திருடிய கண்ணன்வந்தாலும் சரி, இந்த அகிலத்தையே அழித்திடுவேன் நெற்றிக் கண்ணின் துணைகொண்டு என ருத்ரமூர்த்தியாய் சுடலையாடிய உம்பெருமான் வந்தாலும் சரி, உங்களின் உதவாக்கரைக் கொள்கைகள் நிலைக்காது! நிலைக்க விடமாட்டோம்!

நந்தர்குடியைக் கெடுக்க சந்திரகுப்தனைக் கண்டுபிடித்து, அவன் உதவியைக் கொண்டு, நானிலம் போற்ற நாவலந்தீவை ஆண்டிருந்த நந்தராட்சியை அழித்த சண்டாளன்-சதிகாரன்-சாணக்கியனின் சந்ததியினர்தான் நீங்கள் என்பதை நாங்கள் நன்றாய் அறிவோம்! உங்களின் தில்லுமல்லுக் கொள்கைகளைக் காசினிக்கு எடுத்தோதிய புத்தனை பதினோராவது அவதாரமாக்கியதையும் நாங்கள் அறிவோம். பௌத்தத்திலே ‘மஹாயானம்’ ‘கூீனயானம்’ உண்டாக்கியதும் நீங்கள் என்பதை அறிவோம். ஜப்பானியச் செல்வனும், தென்னாட்டுத் தோழனும் ஒன்றாய் இருந்து ஓதிய நாலந்தா சர்வகலாசாலையை நெருப்பிலிட்டதும் நீங்கள் என்பதையும் நாங்களறிவோம். கஜினிமாமூது இந்த நாட்டின் மீது படையெடுத்த போது துளசிமாலையையும், பசுவையும் அவன் பாதையிலே வைத்ததையும் நாங்களறிவோம். அதே கஜினிமாமூதுவிடத்துப்பிறகு “கற்றோனே, எந்நற்றாயே” எனக் கொஞ்சியதையும் நாங்களறிவோம். ஆண்டியும், அரசனும் ஒன்றே என்று ஆண்டிருந்த அண்ணல் அசோகரின் ஆட்சியை அழித்ததும் நீங்களே என்றறிவோம். 1757விலே ப்ளாசி யுத்தத்திலே வெற்றிபெற்ற க்ளைவைக் கண்ணனின் அவதாரமாகக் கொண்டாடிய கயவர் கூட்டந்தான் நீங்கள் என்பதையும் நாங்கள் அறிவோம். ஓமான் சந்துகளை உற்பத்தி செய்ததும் உங்கள் கூட்டமே என்பதையும் அறிவோம். பூரணய்யாக்களைப் பாரில் தோற்றுவித்ததும் உங்கள் குலமே என்பதையும் நாங்கள் அறிவோம் உலகம் போற்றும் உத்தமர், சத்தியமே நித்தியமென வாழ்ந்தவர், விடுதலைப் போரிலே வேட்கை மிகக்கொண்டு ஆனந்த சுதந்திரம் அடையப் பாடுபட்ட புனிதர், ஏழைகளோடு தோழமை கொள்வோம் என உபதேசித்தவர், இராம ராஜ்ஜியம் வேண்டும் எனக் கூறிவந்த காந்தியைக் கொலை செய்ததும் உங்கள் கோட்சேதான் என்பதையும் நாங்கள் அறிவோம்.

ஆரியமே! இந்த நாட்டில் இனியும் நீ வாழலாம் என எண்ணுவது ஏமாளித்தனமேதான். இனிச் செல்லாது, நில்லாது எனத் தெரிந்து திருந்துங்கள் என வேண்டுகிறோம்.

நீங்கள் எந்தச் சேலத்திலே ஆரியத்திற்கு ஆபத்து என்று அலறினீர்களோ, எந்தச் சேலத்திலே நாடெங்கும் பார்ப்பன வெறுப்புணர்ச்சி மிகுந்து கிடக்கிறது என்று மங்கிய குரலிலே கூறினீரோ, இனிச் சும்மாயிருக்கக்கூடாது ஏதாவது செய்ய வேண்டும் என்று சிந்து பாடினீரோ, அதே சேலத்திலேதான், அய்ந்தாண்டுகளுக்கு முன் இந் நாட்டுக் குடையோர் கூடி, ஆரியத்தை அழிக்கின்ற வேலையிலே, ஒழிக்கின்ற பணியிலே எங்கள் உயிரையும் பணயம் வைத்திடுவோம் என்று இளங் காளையராக நின்று முழக்கமிட்டனர். அந்தச் சேலத்திலேதான் உன் சதியை நன்றாக நாட்டுக்கு விளக்கிக் காட்டினர் நம் தமிழ் நாட்டு மக்கள்.

இனியும் இந்தப் பொன்னாட்டை வஞ்சக நினைப்பால் ஆள எண்ணும் ஆரியர் கூட்டமே! அந்தக் காளையர் பட்டம் பதவி எங்களுக்குத் தேவையில்லை, இந்தப் பரப்பிருமங்கள் தொலைந்தால் போதுமென்ற நினைப்புடையவர்கள்—அவர்கள் எதற்கும் தயார் என்று எக்காளமிடும், புறநானூறு பெற்றெடுத்த பிள்ளைகள் என்று உணர்ந்துகொள்! உதாரணம் தேவையா, இதோ குடந்தையிலே அவர்கள் கொட்டிய குருதி, பார்! குடந்தை மண்ணிலே தண்ணீர்போல் இரத்தம் ஓடியநேரத்திலும், “இன்பத் தமிழ் என்றும் வாழ்க” என முழக்கமிட்ட எம்நாட்டுத் தோழர்கள்! அதிகார போதையின் காரணமாக ஆளவந்தார் அடிமேலடியாக அடித்த போதும், அருமைத் தமிழே உன்னைக் காக்க எது வரினும்

ரோஜா முத்தையா

# கிறிஸ்துவ மார்க்கமா?

மதப் பிரச்சாரம் அல்ல! அதுதான் நம்மிடம் கிடையவே கிடையாதே. (மதம்) விஷம் என்னும் விடை கிடைத்தபின், தன்னலம் கருதாத யார்தான் தரணிக்குத் தருவர் அதை. சீர்திருத்தும் சிற்பியின் சிந்தனையும் சிதைந்துபோம் மதம் என்னும் மாசு புகுந்தால் என்பதற்கு, அசைக்கமுடியாத ஆதாரம் உண்டு என்பதை அறிவீனரும் அறியும்படி செய்யவே, இதை இங்கு தருகிறேன் பைபிளின் பல வசனங்களோடு.

அன்று, ஆம், யேசு என்னும் சீர்திருத்தச்சீராளன், கர்த்தர் என்றுகூறி ஏய்த்துப் பிழைத்த கசடர்களைப் பகுத்தறிவு என்னும் பாசறைக்கு இழுத்த அந்தக்காலத்தில்தான் இது நடந்ததாம்.

யோவான் அதி 8 வச 3-9 வரை:

வேசித்தனம் செய்தாள் என்று குற்றம் சாட்டிப், பெண் ஒருத்தியை யேசுவின் முன் நிறுத்தி, இவள் வேசி! பல ஆடவருடன் கூடி அநியாயம் செய்கிறாள்! என்று குற்றம் சாட்டிய கூட்டத்திற்கு, உங்களில் யோக்கியன் இவள்மேல் கல் எறிந்து கொல்லுங்கள் என்றார் அந்த நீதிபதி. இந்த உண்மையை உணர, உரம் அற்ற அந்தகர்களின் அநியாயச் செய்கைகளை, இப்போதுள்ள கிறிஸ்து மார்க்கத்தில் நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, ஆச்சரியம் அல்ல, அதிர்ச்சிதான் உண்டாகிறது. பெண்களுக்கோர் நீதி! ஆண்களுக்கோர்நீதி! பெண்ணுக்கும் ஆணுக்கும் தனி இடம், அடிமைத்தனத்தைப் போக்கிய அவரைத்தியானிக்கும் இடத்தில். ஆம்! ஆலயத்தில் நடப்பதைத்தான் சொல்கிறேன். ஆண் அவன் மனம் போல் அலையலாம், அதை அடக்கி ஆவன செய்ய ஆள் இல்லை. ஆனால் பெண்கள் முக்காடிடவேண்டும் இந்தப் பேதையர் கூடும் கூட்டத்தில்.

மாற்கு அதி 10 வச 11.

ஆணும் பெண்ணும் ஒன்றே என்று ஓதினார் அவர்! ஆனால் ஆணுக்கோர் நீதி, பெண்ணுக்கோர் நீதி இந்த அநியாய அடிமைகள் உண்டாக்கிய மதத்தில். ஆணும் பெண்ணும் யோக்கியமாய் நடக்கவேண்டும்; தவறிய வழியில் தத்தளிக்கும் ஆணுக்கும், பெண்ணுக்கும் வித்தியாசம் இல்லை என்றார் அந்த அன்பர்! ஆனால் ஆண்களுக்காகவே பெண்கள் படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பகர்கிறது இந்தப் பகுத்தறிவற்ற கூட்டம். நீ யோக்கியனாய் இருந்தால் தான், யோக்கியதை அற்ற பெண்ணைக்கண்டிக்கக்கூடும் என்றார் அந்தயோகி! ஆனால் ஆடவர் பெண்டிரிலும் உயர்ந்தவர் என்றும் ஆண்களை அசைக்க உரிமை இல்லை என்றும் முழங்குகிறது இந்த உலுத்தர் கூட்டம். பெண்ணைப்பேடி என்று எண்ணாதே என்றார் அந்தப் பெரியார்! ஆனால் பெண்ணிற்குச் சபையில் பேச உரிமை இல்லை என்கிறது இந்தப்பேதையர் கூட்டம்.

மத்தேயு அதி 19 வச 24.

பணக்காரன் பங்கு கொள்ளான் பரலோகத்தில் என்றார், அந்த அஞ்சா நெஞ்சம் கொண்டார்! ஆனால் பணக்காரனுக்கு முதலிடம் தருகிறது இந்தப் பணப்பற்றகூட்டம். உம்மோடு வருவேன் என்றான் ஓர் பணக்கார பண்டகசாலை. (மத்தேயு. அதி 19 வச 21) உனக்கு உள்ளவைகளை விற்று எளியவர்களுக்குக் கொடுத்துவிட்டு என் பின்னால் வா! என்றார் அந்தப் பணப் பண்ணை நிர்மூலர்! ஆனால் பணக்காரன்தான் மெம்பர் ஆகலாம் இந்தப் படுபாதாளத்தில்.

அப்போஸ்தலர் அதி 4 வச 34-35.

தங்களுக்குண்டானவைகளை ஒன்றாகச் சேர்த்து உண்டார்கள் அந்தப் பொது உடமைப் போர் வீரர்கள்! ஆனால் உண்டி பெருத்து ஏப்பம் விடும் எத்தர்களும், உண்டியே இல்லாதாரும் உள்ளார்கள் இந்த இழிந்த மார்க்கத்தில். ஏழ்மைப் புயலில் புகுந்து புண்படும் ஏழைகளைப் பார்த்தும் பாராததுபோல் பாசாங்கு செய்யும் பதர்கள் உள்ளார்கள் இந்தப் பழிகாரப் பண்ணையில். இரண்டு அங்கி (ஆடை) இருந்தால் ஒன்றைஇல்லாதவனுக்குக் கொடுஎன்றார் அந்தக்கொடை வள்ளல். ஆனால் உடை அற்றோரையும் உறிஞ்சி வாழ்கிறது, இந்த நாளுக்கோரு நிறத்தில் ஆடை உடுத்தும் நரிக் கும்பலின் தலைகள்.

மத்தேயு அதி 10 வச 9-10-ம் லூக்கா அதி 10 வச 4ம்:

பாதரட்சையும், தடியும்கூட வேண்டாம் பகுத்தறிவைப் பரப்பச் செல்! என்றார் அந்தப் பகுத்தறிவாளர். ஆனால் ரெயில்வாகனம் இரண்டு வேண்டும், இந்த மதப்பிரச்சார மண்டுகங்கள் மனை மாற்ற.

படைக்கப்பட்டவர்களில் ஒருவரும் ஒதுக்கப்பட்டவர் அல்ல. (அதாவது ஜாதிஎன்பதில்லை) என்றார் அந்தச் சன்மார்க்கர்! அய்யோ! ஒரே ஜாதியே இரு ஜாதி, எண்ணமுடியாத ஏராள ஜாதி, மலையையும் மறைக்கும் மதப் பிளவு, இந்த மமதைகள் ஏற்படுத்திய மட்ட மதத்தில்.

மத்தேயு அதி 5 வச 39.

அடிபட்ட கன்னத்திற்கு அடுத்த கன்னத்தையும் காட்டு அடிப்பவனிடம் என்றார் அந்த அகிம்சாமூர்த்தி! ஆனால் அன்பே அறியாது இந்த ஆணவக்கூட்டம்.

இதைப்படிக்கும் பக்தன் பதறலாம்! ஆனால் பலன் ஏது? பதற்றத்தை விட்டுப் பக்குவமாய்ச் சிந்தித்தால் பலன் கிடைக்கும். ஏசுவின் போதனை எள்ளளவும் உண்டா இந்த எடுதாங்கிகளிடம்?

தான் தான் உலகத்தில் உயர்ந்தவன் என்ற உலுத்த எண்ணம் கொண்ட உதவா வம்சத்தில் உதித்தார் அந்த உத்தமர் ஏசு! தன் ஜாதிக்கு விரோதமாகத் தரணியை எழுப்பத்தயங்கினார் இல்லை! பெண் அடிமை, பிறவி அடிமை இல்லை என்றும், பணக்காரனைப் பாதாளக்குழி என்றும், தான் தோன்றித்தனம் தகாதென்றும் கூறினார்.

மாற்கு அதி 15 வச 1-15.

அப்போது இருந்த ஆசாரியர் (இப்போது சாமியார், பாதிரிகள்) பிரதான ஆசாரியன் (போப், ஆர்ச்பிஷப்) மூப்பர்கள், (மெம்பர்கள்) என்பவர்கள், துடைநடுங்கியும், துஷ்டனுமான பிலாத்து என்பவனிடம் கொண்டு போய், இந்த வயிறு வளர்த்த வம்பர்களால் ஏற்படுத்திய பொய்ச்சாட்சி மூலம், படுகொலை செய்யப்பட்டார் அந்தத்தியாகி! தன்னையே வழி என்று கூறினார் அந்த வழிகாட்டி! ஆனால் இந்த விரும்பார் கூட்டம் அவரைக் கடவுளாக்கிக் கயமைத்தனம் செய்து காலம் கழிக்கிறது.

யேசுவின் போதனை எள்ளளவாவது உண்டா இந்த அர்த்தத்தை அனர்த்தம் செய்த கூட்டத்தில்? அன்று அவரை பிலாத்து, ஆசாரியர், பிரதான ஆசாரியன், மூப்பர்கள் கொன்றார்கள் என்றால், இன்று எந்த

---

தாங்குவேன் எனத் தீரமொழி புகன்ற பைந்தமிழ்நாட்டு வீரர்கள்! பார்! அவர்களின் அருமைத் தலைவரைப் பார்! அந்தக் கிழச் சிங்கம்தான் உங்களைக் கல்லறைக்குக் கொண்டு சேர்க்கும், அவரின் ஆற்றலிலேதான் நீ அழிவு காணப்போகின்றாய்! 'பாராட்டிப் போற்றிவந்த பழமை லோகம் ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்' என்ற தோழர் மு. கருணாநிதியின்பாடலை உணர்ந்தாவது திருந்து! இல்லையேல்............?

—மு. சுப்பையன்

ரோஜா முத்தையா நூலக அறக்கட்டளை

# திருக்குறள் அறம்!

## II.

அறம் என்ற உலகை நிலை நிறுத்தும் ஆற்றலை அடிப்படையாகக் கொண்டு தெளிவுற, அழகிய முறையில் குறள் எழுதப்பட்டிருக்கிறது என்று கண்டோம். இனி அறம் என்பது எக்காலத்திற்கும் ஓரே தன்மையினதுதானா என்பதையும், அல்லது காலமாறுபாட்டிற்கு ஏற்ப 'அறம்' என்று மக்கள் நினைப்பவற்றிலும் சில மாறுபாடுகள் ஏற்படுமா என்பதையும் காண்போம்.

இலக்கணம் எவ்வாறு வரம்பின்றிச் செல்லும் மொழியைக் கட்டுப்படுத்தி அழகு செய்து நிலை நிறுத்துகின்றதோ அது போலவே அறமும் வரம்பின்றித் தீயவழிகளில் செல்ல விரும்பும் நம் மனத்தைக் கட்டுப்படுத்தி நல்ல வழியிற் செலுத்துகின்றது. மொழி மக்களுக்குள் ஒருவருக்கொருவர் கருத்தைப் பரிமாறிக் கொள்ளப் பயன்படுவது, ஆகையால் மக்களின் நாகரிக வளர்ச்சிக்கேற்ப மொழி மாறுபடுவதும் இயற்கை. அவ்வாறு மாறித் திருந்தாத மொழிகள் கால வெள்ளத்தில் அழிந்து போய்விடுகின்றன. மொழி மாறுபடும் பொழுது அதனைக் கட்டுப்படுத்தும் இலக்கணமும் பொருந்திய முறையில், வரம்புக்கு உட்பட்டுச் சிறிது, சிறிதாக மாற்றமடைய வேண்டியிருக்கிறது. அதுபோலவே உலகை நிலைநிறுத்தும் அறமும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், நாகரிக சிறப்புக்கும் ஏற்ப மாறுபட்டே ஆகவேண்டும். பெண்பால் அறிஞர்களையும், விஞ்ஞானிகளையும் காணும் தற்காலத்தில் 'பெண்ணறிவென்பது பெரும் பேதமைத்தே' என்பதும் 'பெண்புத்தி கேட்டல் தீது', என்பதும் கேலிக்குரியனவாகும். ஆணும், பெண்ணும் இருகண்களைப்போல் பாவிக்கப்பட வேண்டும் என்பதும், 'நாணமும், அச்சமும் வேண்டும் எனில் ஆணுக்கும், பெண்ணுக்கும் வேண்டும்' என்பதுமே இக்கால அறமாக இருக்க முடியும். எனவே 'அறம்' கால, அறிவு, நாகரிக வளர்ச்சிகளுக்கேற்ப மாறுபடும்போது, அதனைப் பற்றிக் கூறும் அறநூலும் மாறுபடுவது, மாறுபட வேண்டியது இயற்கை. ஆனால் நமது குறட்செல்வம் இத்தகைய இயற்கை மாறுபாட்டையும் கடந்து என்றும் குன்றா விளக்காய் ஒளிர்கின்றது. நாடு, இனம், ஜாதி, மதம் முதலிய பிரிவுகளனைத்தையும் கடந்த 'பொது'வில் நடமிடுகின்றது. காரணம் எல்லாவற்றையும் பொதுவாகவும், இறந்தகால, நிகழ்கால உலக நிலைகளின் மூலம் வருங்காலத்தை அறியும் தலை சிறந்த அறிவாலும், எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அழுத்தமாகவும், உறுதியாகவும் எழுதப்பட்டிருப்பதுதான். நிற்க,

இயற்கையான குற்றங்களை நீக்கி, ஏற்கவேண்டிய நன்மைகளைப் புகுத்தி மனநிலைக் களத்தில் தோன்றும் அறமாகிய விளக்கை அறிவுதான் பாதுகாக்கின்றது. துடைத்துத் துப்புரவு செய்கின்றது. சுடர்விட்டுஒளிவீசச் செய்கின்றது. பொருள் அறவழிப்பட்ட மனத்திற்கு ஆக்கவழித் துணையாக உதவுகின்றது. மனம் தீதானால் பொருள் தீமைக்குப் பயன்படும். அவ்வமயம் அறம் அதுகூடாது என்று கூறும். அறிவு கண்டிக்கும். எனவே அறவிளக்கைத் தீமைக் காற்றினால் அணையவிடாது அதைக் கூடி எரியாமலும், குறைந்து போகாமலும் சமநிலைப்படுத்தி என்றும் ஒருநிலைப்படுத்தும் அறிவு மிக இன்றியமையாததாகின்றது.

இத்தகைய அறவிளக்கினின்றும் வருவதுதான் இன்ப ஒளி! அதைத்தான் வள்ளுவர் அறத்தான் வருவதே இன்பம்' என்று மிகவும் வலியுறுத்திக் கூறுகிறார். உண்மையை உறுதியாகச் சொல்லிவிடும் வள்ளுவரின் திண்மைக்கு ஒப்பே இல்லை! பலருடைய நினைப்பு இல்லாவிட்டாலும்— செயல் அறமல்லாத வழியில்தான் இன்பம் திடீரென வந்துவிடுகிறது என்ற முறையில் காணப்படுகிறது. ஆயின் அந்த இன்பம் எத்தகையது? அதை இன்பமல்லவென்று ஏன் கூறவேண்டும்? என்றால் அவ்வின்பம் விளக்கொளியைக் கண்டு விழையும் விட்டில் பூச்சி காணும்

"அண்ணல்"

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

---

நேரமும் கொலை செய்கிறது இந்த செய்வதறியாக் கூட்டம். ஏசுவின் போதனை எள்ளவும் இல்லாவிட்டால் ஏசுவின் மார்க்கம் எப்படியாகும் என்பதையாவது சிந்திப்பார் உண்டா? அதிகம் எழுத அவகாசம் இல்லை. ஆங்கிலேயன் அரசாட்சி இல்லாதிருந்தால் இது இருந்த இடம் தெரியாமல் போய் இருக்கும், இல்லாவிட்டால் இவ்வளவு கூட்டமாவது சேராதிருக்கும். ஆங்கிலேய நாகரீகம்தான் சிலரிடம் சிக்கி இருக்கிறது! அது எல்லா மத ஏடு தாங்கிகளிடமும் உண்டு! சிந்திக்கும் சிரமைந்த சிரசுக்கு இது போதும்! இனியாவது ஏசுவின் போதனை, யாரிடம் இருக்கிறது என்பதைக் கிரகித்து அவ்வழிச் செல்ல ஆர்வம் கொள்ள வேண்டும்!

கடைசியாக ஒரு வார்த்தை: ஏசு என்பவர் யாருக்காக இவ்வுலகில் பாடுபட்டார் என்பதாவது தெரியுமா? [மத்தேயு அதி 10 வச6, மத்தேயு அதி15 வச 24, மாற்கு அதி 7 வச 26, 27] உலகிற்குப் பாடுபட வரவில்லை என்றும், தன் இனமாகிய இஸ்ரவேலர்க்காகவே வந்தேன் என்றும், பக்தர்கள் பதறும்படி பகர்ந்துள்ளார். இப்போது என்ன சொல்லுகிறாய் தோழா?

பெத்தலேகேமில் யூத குலத்தில் பிறந்த யேசுவுக்கும், இந்த நாட்டில் உதித்த திராவிடராகிய நமக்கும் என்ன சம்பந்தம் என்பதையாவது எண்ணக் கூடாதா? நம் நாட்டில் பிறந்து நமக்காக தன் உதிரத்தையும் கொடுத்து வரும் இந்த வெண்தாடி வேந்தன்—பெரியாரின் பின்னால் செல்லாவிட்டால், இந்த நாட்டில் எந்நாளும் ஏங்கித் தவிக்க வேண்டியதாய்த்தான் வரும் என்பதை எச்சரிக்கிறேன். ஆகையால் என்போன்ற கிறிஸ்தவ வாலிபர்கள் எதற்கும் அஞ்சாது திராவிடக் கழகத்தில் சேர்ந்து தீவிர வேலை செய்ய வேண்டும் என்பதே என் எண்ணம். அன்பை அளிப்போம்! துன்பத்தைத் துரத்துவோம்! சாதியைச் சாடுவோம்! மதத்தை மடிப்போம்! அடிமைத்தனத்தை அகற்றுவோம்! பிளவைப் பிணைப்போம்! இன்பத்தை இரைப்போம்! கண்டு களிப்போம் வாருங்கள்!

"அழகன்"

ரோஜா முத்தையா

# குடி அரசு

5—3—49 சனிக்கிழமை.

## கோபால் மத்தாய் கூட்டுத் திருப்பணி!

எதனால் வந்தது என்று புரிந்து கொள்ள முடியாமலும், தலைவர்களால் புரியவைக்கவும் முடியாத நிலையில், அர்த்தராத்திரியில்வந்து புகுந்த சுயராஜ்ஜியம், இன்று நாட்டைப் பெரும் அலங்கோலப் படுத்தி விட்டது. இந்தச் சுயராஜ்ஜியம், பார்ப்பனச் சுயராஜ்ஜியம்—பனியாக்களின் சுயராஜ்ஜியமே தவிர, பாட்டாளி மக்களுக்குச் சுயராஜ்ஜியமல்ல என்று நாம் விளக்கிய போது தூற்றப்பட்டோம். பாடுபடாத புளியேப்பக்காரர்கள் பவுசோடும் படாடோபத்தோடும் வாழத்தான் இந்தச் சுய ஆட்சி, பாதை அமைக்குமே தவிர, பாடுபட்டுழைத்துழைத்துப் பசியினால் வாடும் பசியேப்பக்காரர்களின் பசியைப் போக்க வழி வகுக்காது என்று கூறியபோது நாம் பழித்துப் பேசப்பட்டோம். உழைக்காத கும்பல் உடல் மினுப்புக் குன்றாமலிருக்க, தொந்தி வாடாதிருக்கத்தான், இந்த உத்தமர்களின் சுய ஆட்சி உருவாகி இருக்கிறதே தவிர, ஒட்டிய வயிற்றோடு உழைத்துருக்குலையுமினம் ஒரு அங்குல அளவு கூட முன்னேற, இது உதவி செய்யாது என்று நாம் உரைத்த போது, அதை உணர மறுத்தார்கள் நாட்டு மக்கள். வேதியர்களின் ஆசீர்வாதத்தோடு விளக்கம் தெரியாமல் நுழைந்த சுய ஆட்சிக்குக்காரணம், வெள்ளையர்—பனியாக்கள் கூட்டுச்சதி என்று நாம் விளம்பினோம், ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள் இந்நாட்டு மக்கள். தொழிலாளியின் துயர் போக்க அல்ல, பெருக்குவதற்கே இது துணை நிற்கும் என்று சொன்னோம்,—பல முறை வற்புறுத்திச்சொன்னோம், துர்ப்புத்திக்காரர்கள் என்கிற பட்டம் தான் நமக்கு.

இன்றைய நிலை என்ன?

கோபால் மத்தாய்கள் அதை வற்புறுத்துகிறார்கள், கேளுங்கள்.

சென்னை மாகாண நிதிமந்திரி தோழர் கோபால் ரெட்டி அவர்கள். மத்திய அரசாங்க நிதி மந்திரி தோழர் ஜான் மத்தாய் அவர்கள். மாகாணச் செலவைச் சரிக்கட்ட வரவுக்கு மேல் 4 கோடி ரூபாய் வேண்டுமென்கிறார் முந்தியவர். மத்திய அரசாங்கச் செலவைச் சரிக்கட்ட வரவுக்குமேல் 15 கோடி ரூபாய் வேண்டுமென்கிறார் பிந்தியவர். வந்து கொண்டிருக்கும் வரவு 52 கோடி என்கிறார் முந்தியவர்; 308 கோடி என்கிறார் பிந்தியவர். 52 கோடிக்கு மேலும் 4 கோடி; 308 கோடிக்கு மேலும் 15 கோடி! பிந்தியவரையும் மிஞ்சி விடுகிறார் முந்தியவர்!

நமது மாகாண சர்க்கார் நடப்பதற்கு வருஷமொன்றுக்கு 56 கோடி ரூபாய் வேண்டுமாம்! நமது மத்திய சர்க்கார் நடப்பதற்கு 323 கோடி ரூபாய் வேண்டுமாம்!

மாகாண சர்க்காரின் வருஷ வருமானத்தில் பெரும் பகுதியை அதன் நிர்வாகமே விழுங்கி விடுகிறது. மத்திய சர்க்காரின் வருமானத்தில் பெரும் பகுதியை பட்டாளம் விழுங்கி விடுகிறது. [308 கோடி வருமானத்தில் இராணுவச் செலவு 157 கோடி]

இரத்தத்தைப் பிழிந்து உடலை வாட்டி உழைத்து, உழைப்பைச் செல்வமாக்கிய பிறகு தான், அந்தச் செல்வத்தை மறைமுகமாக—தந்திரமாக—வஞ்சனையாக அபகரிக்க முயற்சிக்கிறார்கள் பலர். இந்த முயற்சியில் தோல்வி அடைபவர் பலர் என்றாலும் சிலர் வெற்றி பெற்று விடுகின்றனர். இப்படி போட்டியிடும் எல்லோரையும் ஆதரித்து, அவர்களுக்குத் தேவையானபோது உதவியளித்துப் பின் வெற்றி பெற்ற கூட்டத்தாரிடமிருந்து ஒரு பங்கை நிர்ணயித்து, அதை வாங்கித் தன் நிர்வாகத்தை நடத்துவதுதான் தனியுடைமை இருந்து வரும் (முதலாளித்துவ) நாட்டின் அரசாங்கப் பொதுவிதி.

நம்முடைய நாடு, தனியுடைமைக் கொள்கையையுடைய நாடாக இருந்த போதிலும், உழைப்பை இழிவு என்றே மத ஆதிபத்தியக்காரர்கள் ஆயிரமாயிரமாண்டுகளாகப் போதித்து வந்த காரணத்தினாலும், அந்த மத ஆதிக்கக்காரர்கள் வழியே அரசாங்கம் சென்று கொண்டிருந்ததாலும், உழைப்புக்கு மதிப்பின்றிப்போய், மிக மிக மலிவாகக் கிடைக்கக்கூடிய சரக்கு உழைப்பு என்ற நிலைமை வந்து விட்டதால், மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை. வாழ்க்கைத்தரம் உயராத நிலையில் வந்து புகுந்த வெள்ளை ஏகாதிபத்தியம், தன் வாணிபத்துக்கு இந்தநாட்டைச் சந்தையாக உபயோகப் படுத்திக் கொள்ளவேண்டும் என்கிற திட்டத்தால், இந்த நாட்டில் வணிகர்கள் என்பவர்கள் வெறும் தரகுக்காரர்களாய்—கமிஷன் ஏஜண்டுகளாய் இருந்து வந்தார்களே தவிர—இருந்து வர முடிந்ததே தவிர வணிக வேந்தர்களாக—வாணிபத் துறையில் தன்னரசு ஓச்சுபவர்களாக ஆக முடியவில்லை. அதாவது பெருங் கொள்ளை—கொழுத்தலாபம் அடிக்கமுடியவில்லை.

வெறும் தரகுக்காரர்களாய் இருந்த வியாபாரிகள், அரசாங்க நடப்புக்கு வேண்டிய சிறு பகுதியைக்கூட வரி என்ற பெயரால் கொடுக்கமுடியாத காரணத்தினால் தான், நாட்டின் பொது நலத்தில்—வளத்தில் கவனம் செலுத்த முடியாத, அக்கரைகாட்டத் தேவையில்லாத வெள்ளை ஏகாதிபத்தியம் இந்த நாட்டிலுள்ள ஏழை

## வருந்துகிறோம்.

பெண்கள் உலகத்தின் வழிகாட்டியாய், சீர்திருத்த வாழ்வை மேற்கொண்டு, தியாகத் தீயில் பல முறை குதித்தெழுந்த, அய்க்கிய மாகாண கவர்னரான இந்திய வானம்பாடி தோழியர் கவியரசி சரோஜினி அம்மையார் அவர்கள், திடீரென உண்டான மாரடைப்பால் இயற்கை யெய்தினார் என்பதறிந்து பெரிதும் வருந்துகிறோம்.

கள் எல்லோரையும் பாதிக்கத் தகுந்த முறையில், மறைமுக வரியைப் பெரிதாக விஸ்தரிக்கவேண்டி ஏற்பட்டது.

தொழில் வளமின்றி, வியாபாரத் தனியுரிமை பறிக்கப்பட்டுவிட்ட காரணத்தால், எவ்வளவுதான் வரிகளைப் போட்டாலும் அந்த வருமானமெல்லாம் வெள்ளையானைகளுக்கே கட்டுபடியாகாத நிலையில், நாட்டின் நலத்திற்காக, அறிவு, சுகாதாரம் போன்ற மக்கள் நலத்திற்காக வெள்ளை அரசாங்கம் என்ன செய்துவிட முடியும்?

இந்த நிலையைத்தான் நமது காங்கரஸ் தோழர்கள் மக்கள் முன்பு விளக்கினார்கள். வெள்ளையனின் கொடுங்கோன்மையை-வரிச்சுமையைப் புட்டுப் புட்டுக் கூறினார்கள். இந்த நாடு சுயராஜ்யம் பெற்றால், ஏழைக்கு வரி என்பது இருக்குமா? என்று கேட்டார்கள். நிற்க,

இன்று சுயராஜ்ஜியம் கிடைத்த பிறகோ, பனியாப், பார்ப்பன ஆதிக்கக் காங்கரஸ் சர்க்கார், தன் சுயரூபத்தை வெளிப்படையாகவே காட்டித்தீர வேண்டியதாயிற்று. இதை நாம் கூறியபோது ஒப்புக் கொள்ளாதவர்களாய், சென்னையில் பேசிய இரும்புத் தலையர், நேற்று, இது முதலாளிகள் ராஜ்ஜியம் என்பது முழுப் பொய் என்று முழக்கியிருந்தாலுங்கூட, இன்று கோபால் மத்தாய்களின் கூட்டுத் திருப்பணி, இதை வெட்ட வெளிச்சமாக்கிவிடுமென்றே நம்புகிறோம்.

வந்துகொண்டிருக்கும் வருமானங்களில் பெரும் பகுதி, வெள்ளையன் வகுத்த வழியில், அரசாங்கத்துக்குக் கிடைக்கிறது என்பதையும், அவன் வகுத்த வழியிலேயே மக்களின் பொது நலத்திற்கான வழிகள் மிகமிக ஒடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் யாரும் மறுத்துவிட முடியாது, மறைக்கவும் முடியாது. அதாவது அரசாங்கத்திற்கான வருமானங்களில் பெரும் பகுதியை ஏழை மக்கள்—நடுத்தர மக்களே இப்போது வளர்ந்திருக்கும் நிலைக்கும் கொடுத்து வருகின்றார்கள் என்பதோடு, வரி கொடுப்பதற்குப் பிரதி பலனாக எந்தெந்த சௌகரியத்தை அரசாங்கத்திடமிருந்து அவர்கள் எதிர்பார்க்க வேண்டுமோ-அரசாங்கம் செய்ய வேண்டுமோ அந்த நிலை, அன்றைய வெள்ளையன் காலத்தைப் போலவே இன்றும் குறுக்கப்பட்டுத்தானிருக்கிறது.

தொழில் பெருக்கமில்லாத நாட்டில்—இயற்கைச் செல்வங்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நாட்டில்—அடிமை நாடாயிருந்து சுதந்தரமாக மாறிய நாட்டில் இந்த வரிச்சுமை பெருகித்தான் ஆகவேண்டும் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் பெருகும் வரிச்சுமை, பெரும் நிர்மாணத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக—மக்கள் நலத்திற்கான அபிவிருத்தித் திட்டங்கள் வளர்ந்தோங்குவதற்காக என்றில்லாத நிலையில் மேலும் மேலும் ஏழைகளை—நடுத்தர மக்களை ஒடுக்கும் வகையில் பெருக்கிக் கொண்டு போகலாமா? அதே நேரத்தில் முதலாளிகளை உண்டாக்குவதற்காக — அவர்களைச் செழிப்பாக வளர்ப்பதற்காக அவர்கள் கையிலிருக்கும் சிறுபாரத்தையும் வாங்கி, வரிச்சுமை தாங்காத மக்கள் தலையில் ஏற்றிக் கொண்டே போகலாமா?

இரண்டு நிதி மந்திரிகளும் துண்டுவிழும் தொகையை எப்படிச் சரிக்கட்டுகிறார்கள் என்பதைப் பாருங்கள்.

மாகாண நிதியைச் சரிக்கட்ட

(1) தேங்காய், எண்ணெய்வித்துக்கள், கரும்பு, மிளகாய், காப்பிக் கொட்டை, ரப்பர், உருளைக் கிழங்கு, மிளகு, மஞ்சள், வாழைப் பழம், முதலியவைகளுக்கு இதுவரை, முதல் விற்பனையில் அதாவது விவசாயி வியாபாரிக்கு விற்கும்போது கொள்முதல் வரி இல்லாதிருந்தது. இனி விவசாயி விற்கும்போதும் அதற்குக் கொள்முதல் வரி.

(2) வேர்க்கடலை முந்திரிப் பருப்பு இவைகளுக்கு முன்பே வரியுண்டு, இந்த வரி இனிமேல் ஒன்றுக்கு ஒன்றரையாக்கப்படும்.

(3) தேயிலைக்கு வரியுண்டு, அதன் ஏற்றுமதிக்கு வரியில்லாமலிருக்கிறது. இனி ஏற்றுமதிக்கும் வரி விதிக்கப்படும்.

(4) பருத்திக்கு வரி இல்லை, இனிமேல் அதற்கு வரியுண்டு.

(5) பஸ் கட்டணங்களில் ரூபாய்க்கு அரைக்கால் வரி. லாரிகளுக்கும் வரி. வீட்டு வரி வாங்கும் ஸ்தல ஸ்தாபனங்களிடமிருந்து ரூபாய்க்கு அரைக்கால் வரி. மின்சாரத்திற்குப் பிரத்தியேக வரி.

(6) விளம்பரங்கள், வார்த்தைப் போட்டிப் பந்தயங்கள், காப்பி ஹோட்டல்கள், சினிமாக் கொட்டகைகள்மீது ஒரு புது வரி. யுத்த காலச் சொத்து விற்பனைமீது வரி.

இப்படி விதிக்கப்படும் வரிகளால், என் நிதியைச் சரிக்கட்டுவேன் என்கிறார் தோழர் கோபால் ரெட்டியவர்கள்.

மத்திய அரசாங்க நிதியைச் சரிக்கட்ட,

1. கார்டு முக்காலணா கவர் இரண்டணா.
2. பாக்கு இறக்குமதி வரி ஒன்றுக்கு ஒன்றரை.
3. கயிறு, மண்பாண்டம், பீங்கான், செயற்கைப் பட்டுக்களுக்கு ஒன்றுக்கு இரண்டுபங்கு சர்சார்ஜ்.
4. பத்திரிக்கைக் காகிதம் தவிர மற்றெல்லாக் காகிதங்களுக்கும் அதிக வரி.
5. ஸ்டேஷனரிப் பொருள்கள், கண்ணாடி, கத்தி முதலியவைகளுக்கு அதிக வரி.
6. மேஜை, நாற்காலி, புகைப்படக் கருவிகள் கைக் கெடியாரங்களுக்கு அதிகத் தீர்வை.
7. மில் துணிகளுக்கு எதிர் வரி வேறு போடப்படும்.
8 சர்க்கரைப் பொருளுக்கு வரி யுயரும்.

இப்படிப் புது வரிகள் பல உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறதே, பழைய வரிகள் ஏதேனும் போய் விட்டதா என்று கேட்கிறீர்களா?

---

அடுத்த இதழ் முதல்

## தொல்காப்பியப்

### பொருளதிகார விளக்கம்

தொடர்ந்து வெளிவரும்!

எழுதுகிறவர்:--புலவர் குழந்தை.

[குறிப்பு:— திருவள்ளுவர் மாநாட்டின் விளைவாக, நியமிக்கப்பட்டிருக்கும் உரைக்குழுவினரின் உரையை எதிர்பார்த்து, திருக்குறளுக்கு உரை வெளியிடும் முயற்சி நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆ-ர்]

ஆ! குறைக்கிறேன். ஆனால் அது வேறு இனத்திற்காக—எங்களை வாழவைக்கும் இனத்திற்காக என்கிறார் மத்திய நிதி மந்திரி.

(1) ஒரு மூலதனத்தின்மீது வியாபாரிக்குக் கிடைக்கும் லாபத்தில் வரிக் கட்டவேண்டுமென்றிருக்கிறதே, அந்த வரியை வியாபாரிகள் கட்ட வேண்டியதில்லை.

(2) வியாபாரிக்கு 10,000 ரூபாய் வருமானம் வந்தால் அந்த வருமானத்திற்குக் காலணா வீதம் வரி என்று குறைக்கப்பட்டிருக்கிறது.

(3) வருமான வரி 1 அணாவாக இருப்பது இனி முக்காலணா 2 அணாவாக இருப்பது 1½ அணா.

(4) அமித வரியில் ½ அணாக் குறைவு.

(5) எண்ணெய் வித்துக்கள், தாவர எண்ணெய் ஏற்றுமதிக்கு, ஏற்றுமதி வரி இருந்ததே, அது இனி ரத்துச் செய்யப்படும்.

(6) விமானப் பெட்ரோல்மீது இருக்கும் வரி இனிமேல் பாதியாகக் குறைக்கப்படும்.

இப்படி வியாபாரிகளுக்குச் சலுகை காட்டி, ஏழை நடுத்தர மக்களைக் கசக்கிப் பிழிவதால் என் நிதியைச் சரிக்கட்டி விடுவேன் என்கிறார் தோழர் ஜான் மத்தாய் அவர்கள்.

மாகாண நிதி மந்திரியின் புது வரிகளில், யுத்தகாலச் சொத்து விற்பனை வரி என்கிற ஒன்று தவிர, எஞ்சிய எல்லாம் யாரைப் பாதிக்கக்கூடியன? மத்திய நிதி மந்திரியின் புதுவரியில் நூற்றுக்கு நூறு யாரைப் பாதிக்கும்? இப்படி ஏழைகளையும் நடுத்தர மக்களையும் மேலும் மேலும் கசக்கிப் பிழிந்து, பிழிந்தெடுக்கப்பட்ட ரத்தத்தை நிர்வாகமும், பட்டாளமும்தான் பருக வேண்டுமா?

விவசாய வருமானத்திற்கு வரி விதித்தால் 4 கோடிக்கு மேலும் வரி கிடைக்கும் என்கிற உண்மையை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கும் மகாண நிதி மந்திரி, மிராசுதாரர்களைக் கஷ்டப்படுத்த மனம் வரவில்லை என்கிறார்.

வியாபாரிகளுக்கோ, இருக்கும் வரியைக்கூட நான் குறைத்துவிடுகிறேன் என்கிறார் மத்திய நிதி மந்திரி.

இருவரும் போட்டி போட்டுக் கொண்டு, எங்கெங்கே இடம் பாக்கியிருக்கிறது என்பதைப் பார்த்துப் பார்த்து, ஏழை மக்கள் தலையிலே சளைக்காமல் கை வைக்கிறார்கள்.

ஆக, இந்த இருவர்களின் வரவு செலவுத் திட்டத்தால் வெளியாகும் உண்மை என்ன?

ஏகாதியபத்தியத்திற்குத் தூண்கள் வணிகவேந்தர்கள்! நிலச்சுவான்தாரர்கள்! மடாலயங்கள்!

இம்மூன்று வகையினரும் செழிப்புடன் வளர்ந்தால்தான், இவர்களுக்குப் பாதுகாப்பாக ஏழைகளின் குருதியால் அரண் எழுப்பினால்தான், ஏகாதிபத்தியக் கோட்டை வலுப்பெற்றிருக்கும்.

ஏகாதிபத்தியம் செழிக்க வேண்டுமானால், வியாபாரிகள் கொள்ளையடிப்பதற்கு முழு லைசென்ஸ் கொடுத்துவிடவேண்டும்! மிராசுதாரர்களின் மெருகு கலைந்துவிடக்கூடாது! மடாலயங்களில் மக்களுழைப்பு குவிந்து கொண்டே இருக்கவேண்டும்! இதில் கை வைத்தால் ஏகாதிபத்தியம் சரிந்துவிடும்!

இவற்றைத் தவிர, கோபால் மத்தாய்களின் திருப்பணி வேறு எந்த உண்மையைக் காட்டுகிறது?

---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இன்பம் போன்றது. எனவேதான் வள்ளுவர் 'மற்றெல்லாம் புறத்த' என்று கூறுகிறார், அதாவது அறத்திற்கு மாறுபட்டன என்று. மேலும் 'புகழும் இல' என்று கூறுகிறார். அவ்வழியால் வரும் இன்பத்தால் புகழும் கிடையாது, பழியே எனக் கூறுகின்றார். இதையும் வள்ளுவர்காட்டும் ஒரு சிறு எடுத்துக்காட்டின் மூலம் காணலாம். ஒருவன் பெண்ணாசைகாரணமாகவிலைமாதர்வழி அதைத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்கிறான். அவன் காண விரும்பும் இன்பம், அறவழியில் சென்றால் உண்மையில் பயனைத் தரும். ஆனால் அதற்கு மாறுபட்ட வழியில் அவன் செல்கிறான். அதுவும் உண்மையில் இன்பந்தானா? இல்லை. இன்பம் இல்லாதது மட்டும் அல்ல, கேடும் ஆகும். முதலில் பொருளை இழக்கின்றான். இரண்டாவது அந்த 'இருமனப்' பெண்டிரிடம் அவன் காணும் இன்பம் 'இருட்டறையில் சொந்தமல்லாத ஒரு பிணத்தைத் தழுவிக்கொள்ளுகின்றவனின் செயல்போல பேதைமைக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றது. கானலை நீரென்றெண்ணி நடந்துசென்று, மீண்டும் கடுந் தாகத்திற்கு ஆளானவனின் கதையாக ஆகிவிடுகின்றது அவன் நிலைமை. மூன்றாவதாகப் புகழையும் இழந்து உலகின்முன் தாழ்வாக மதிக்கப்படுகிறான். எனவே "அறத்தான் வருவதே இன்பம், மற்றெல்லாம் புறத்த புகழும் இல" என்பது உண்மை அறிவுக்குத் தெற்றென விளங்குகிறது. நிற்க,

அறம் என்பது இயற்கையாக, இன்றியமையாத நிலையில்அமைந்துவிட்ட, அறிவால் திருத்தி மேலும் மேலும் அமைக்கவேண்டிய சட்டம். கால வரிசையும், அறிவுச்சுழற்சியும், நாகரிகவேறுபாடும், பண்பாட்டு மாறுதலும் அதன் ஏடுகளும் பிரிவுகளுமாகும். நாடும், இனமும், அரசும் அவ்வறத்தால் உருவான, உருவாக்கப்படுகின்ற உறுப்புக்கள். தனி மனிதனிடம் உள்ள இன்சொல், அன்பு, அருள், ஒழுக்கம், மானம், என்பனவும்; நாட்டின் நல்லரசின் நல்லாட்சியும்; இனத்தின் அறிவுவழி எழுச்சியும் அந்த அறத்தின் வெளித் தோற்றம். இந்த அடிப்படையை வைத்துக் கொண்டு, அறிவு வழிநின்று அற அடிப்படையில் பொருளீட்டி இன்பம் காணும்தமிழர் பண்பாட்டின்படி குறள் எழுதப்பட்டிருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை.

அதற்குஉரையாசிரியர்கள்இட்டிருக்கும் கவசங்களை எல்லாம் உடைத் தெறிந்து விட்டு, அதிகார முறைகளையும் அழித்து விட்டுத் தனித் தனிக் குறள்களாக எடுத்துப் பார்க்கும் போதுதான் குறளின் உண்மையான ஒளி நம்மை ஊடுருவிச் செல்கிறது. குறளுக்குப் பொருள் கூறும் வழக்கம் ஒழியவேண்டும். ஏனெனில் பெரும்பான்மையான குறள்கள் யாவருக்கும் தெற்றென விளங்கும்படியே அமைந்துள்ளன. சில குறள்களில் மட்டும் சில சொற்கள் சிலருக்குக் கடினமாக இருக்கலாம். இருந்தால் அக்கடினச் சொற்களுக்கு மட்டும் பொருள் கூறப்படுவதில் தவறு இல்லை.

திரைப்பட விமர்சனம்

# வேலைக்காரி!

★

**திரைக்கதை.**

அறிஞர் அண்ணாவின் அற்புதக் கற்பனையான "வேலைக்காரி" கே. ஆர். ராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபையினரால் பல நூற்றுக்கணக்கான இரவுகளில் தஞ்சை, திருச்சி, சேலம் ஆகிய ஊர்களில் நாடகமாக நடைபெற்றிருக்கிறது. இதே கதையைத் தான் இப்போது கோவை ஜூபிடர் பிக்சர்ஸார் தமது அரிய முயற்சியினால், சுமார் எட்டு லட்ச ரூபாய் வரை செலவிட்டு ஒப்பற்ற ஒரு திரைப்படமாகத் தயாரித்துள்ளனர். முதலில் இவர்களது துணிவுக்கு நமது பாராட்டு!

தோழர்களில் பலருக்கு ஒரு பலத்த சந்தேகம். 'நாடகத்தில் பார்த்துள்ள அதே மாதிரி வேகத்துடன் சினிமா அமைந்திருக்காது' என்பதே அது. அத்தகைய தோழர்களுக்கு நம்பிக்கையூட்டுகிறோம்; நாடகக்கதையில் எந்த மாற்றமும் கிடையாது திரைக்கதையிலும். சில காட்சிகள் நாடகத்தில் தான் நன்றாயும், பொருத்தமாயும் இருக்கும். அவை சினிமாவில் நன்றாயிருக்கமுடியாது. சில காட்சிகள் சினிமாவில் தான் சிறப்பாயிருக்கும். நாடகத்தில் அவை இடம்பெற இயலாது. இதற்கேற்ற முறையிலேயே சிற்சிலமாறுதல்களுடன் 'வேலைக்காரி' திரைக்கதை விளங்குகிறது. எடுத்துக்காட்டாக, மாதர்சங்கநடனம், தேநீர் விருந்து நடனம் போன்ற காட்சிகள் சினிமாவில் புதிய அமைப்புகளாகும்.

**வசனம்.**

நாடகமேடையிலே கேட்டுக்கேட்டு நமது நெஞ்சில் நிலையாக இடம் பெற்றுவிட்ட அதே வசனந்தான் சினிமாவிலும் பேசப்படுகிறது, ஆனால் புதிய நடிகர்களின் வாயிலாக. மாற்றாராலும் போற்றப்படும் அறிஞர் அண்ணா அவர்கள் தமது ஆழ்ந்த அனுபவம், பரந்த அறிவு, தெளிந்த மனப்பான்மை ஆகியவைகொண்டு, தமக்கே தனித்தமைந்த அழகிய அடுக்குச்சொல் நடையில், இன்பம், துன்பம், நகை, வியப்பு, அச்சம், வீரம் ஆகிய பல சுவைகளும் விரவிநிற்க, நாட்டின் நலிவுகளை நன்னிலையில் படம் பிடித்து, அவைபோகும் மார்க்கத்தையும் காட்டி, அழகும் கருத்தும் சேர்த்துக் கோத்த வசன அமைப்பு இப்படத்தில் நிறைய இடம் பெற்றுள்ளது. இதற்கிணையான முறையில் தமிழ்ப்படங்கள் எவற்றிலேனும் வசனம் அமையப் பெற்றுள்ளதா என்பதை ஒவ்வொருவரும் பார்த்தே உணரவேண்டும். ஆனால் நடையோ சாதாரணப் பாமரரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதுதான். பல லட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து அம்மாயித்தமிழில் படந்தயாரிப்போருக்கு இது ஒரு சவால் என்றே கூறலாம்.

**பாடல்கள்.**

உடுமலைக்கவிஞரின் பாடல்கள் உயரிய முறையில் உள்ளன. தொழிலாளர் மேன்மை, பெண்களின் உரிமை—கடமை, பக்தனின் உருக்கம், பணக்காரர் கொடுமை, பொருளின் நிலையாமை, காதலின் உயர்வு, பொதுவாக உலகநிலை ஆகிய நற்கருத்துக்கள் விரவிட, தூயதமிழில், நயமுடன் கவிதை வடிவிலமைந்து நல்ல ஏற்ற மெட்டுக்களுடன் இனிதாகப் பாடப்படுகின்றன இப்படத்தில். பின்னணி இசையும் நல்லமுறையில் அமைந்துள்ளது.

**பிறஅம்சங்கள்.**

ஒலிப்பதிவு தெளிவாக இருக்கிறது. படப்பிடிப்பு நல்ல கலை நுணுக்கத்துடனும் திறமையுடனும் செய்யப்பட்டுள்ளது. முதலாவது எழுத்துக்கள் காட்டப் பெறும் போது பற்பல தொழிலாளரின் வாழ்க்கையைக்காட்டுவதும், மாதர்சங்க நடனத்தில் பெண்களின் கடமையை விளக்கிக் காட்டுவதும், "எப்படி வாழ்வேன்" என்ற பாடலுக்குப் புறக்காட்சியாக ஆனந்தன் பட்ட அவதிகளைக் காட்டுவதும், காளியிடம் நீதிகோரி ஆனந்தன் ஆவேசத்துடன் செல்லும்போது மாறி மாறிக் காளியையும் ஆனந்தனையும் பல கோணங்களிலிருந்து படம் பிடித்துக் காட்டுவதும், பிறகு காளியை அலங்கோலப்படுத்திவிட்டு ஆனந்தன் ஓடும்போதும், அவனைத் துரத்திப் பலர் ஓடிவரும் போதும் அவர்கள் காலுக்குக் கீழிருந்து படம் பிடித்துள்ளதும், நடனக் காட்சிகளைக் காட்டுவதும், ஒளிப்பதிவாளரின் திறமையைப் புலனாக்குகின்றன. மற்ற பின்னணிக் காட்சி அமைப்புகளும் சுமாராயிருக்கின்றன. நல்ல இயற்கைக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

**சிறப்பியல்புகள்:**

படத்தை உருவாக்கிய பலதுறைச் சிற்பிகளின் பெயர்களை வரிசையாகக் காட்டிவரும்போதே, புறக்காட்சியாக உழவர் பிற தொழிலாளர் ஆகியோரின் வாழ்க்கை நிலையும் காட்டப்படுகின்றது. இது புது முறையாகும். 'வேலைக்காரி' என்ற கதைப் பெயருக்கேற்ப, படத்தின் ஆரம்பத்தில் வேலைக்காரியின் அன்றாட அலுவல்கள் பலவும் சுருக்கமாகக் காட்டப்படுவது நன்கு அமைந்திருக்கிறது. ஆனந்தனுடைய லட்சியத்துக்கு இடையூறாக அவன் கடன்காரர் தொல்லையால் அவதிப்பட்டு, அழுது கொண்டு அமர்ந்திருக்கும்போது, மணி சைக்கிளில் வருவதும், அவன் பாதையில் குறுக்கே மரம் கிடப்பதும் "இதென்ன போகும் பாதையில் தடை" என்று மணி கூறுவதும் பொருத்தமாக இருக்கிறது. காளியின் நீண்டநாளைய பக்தன் ஆனந்தன், தன் விரோதிக்குக் காளி அருள் செய்ததைக் கேள்வியுற்று மனம் மாறி காளியின்மேல் வெகுண்டு வெறியேறியவனாய்ச் செல்லும்போது, அவன் மனநிலையைச் சித்திரிப்பது போல் குமுறும் எரிமலை, சூறாவளி, இடி மின்னல், அலைகளின் கொந்தளிப்பு ஆகியவற்றைக் காட்டுவது சிறப்பாக அமைந்துள்ளது. படம் இடைவேளைக்காக நிறுத்தப்படுவதைக் கதையுடன் பொருத்திக் காட்டுவதும், திருமணம் சுருங்கிய

---

1330 குறளும் இக்காலத்திற்கு அப்படியே ஏற்றது என்று கூற முடியாது. இருப்பினும் பெரும்பான்மையன எக்காலத்திற்கும் ஏற்றன. அரசியலைப்பற்றிக் கூறப்படுவனயாவும் மன்னனுக்காக என்று குறள் கூறினாலும், அவற்றை இக்கால அரசியலுக்கேற்ப நாம் பொருள் கொண்டால் மிகவும் பொருத்தமாகவும், சிறப்பாகவும் அமைகிறது. மேலும் இக்கால அரசியலில் உள்ள சீர்கேடுகளைக்காட்டி அவற்றை நீக்கவும் குறள் உதவிபுரியுந்தன்மையில் அமைந்திருக்கிறது. ஆங்காங்கு ஒருசில குறள்கள் மட்டும் ஐயத்திற்கும், ஆராய்ச்சிக்கும் இடையே இருக்கின்றன. அவை வள்ளுவரால் இயற்றப்பட்டவைதானா அல்லது அதிகார உறையிட்டு, ஆகாத உரைசெய்து நம்கண்ணுடன் கருத்தையும் மறைத்த உரையாசிரியர் சிலரின் 'வெட்டு, ஒட்டு' வேலைதானா என்பது வளர்ந்து வரும் தமிழ் இளைஞர் உலகம் ஆய்ந்தறிய வேண்டியவை!

(அடுத்த இதழில்)

முறையில் காட்டப்படுவதும், படத்தின் இறுதியில் "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற லட்சியச் சொற்கள் காட்டப்படுவதும், கண் குத்துப் படலத்தில் முதன் முதலாகத் தன் மனைவியைக் கொடுமை செய்ய ஆனந்தன் தொடங்கும்போது, பழத்தின் இடையில் கத்தியைப் பாய்ச்சிக் காட்டுவதும், மணி ஜமீன்தாரிடத்தில் பணம் வாங்கும்போது சவுக்கை வீசுவதும், மூர்த்தியின் கள்ளக் காதலை ஆனந்தன் உணர்ந்துகொண்டதால் அவன் ஆனந்தனிடம் சிக்கிக் கொண்டான் என்பதை விளக்க, மூர்த்தியை ஆனந்தன் காலுக்குக் கீழாக நிறுத்திக் காட்டுவதும், வேதாசல முதலியார் ஆனந்தன்—மணி ஆகிய இருவராலும் அவஸ்தைப்படுவதை எடுத்துக்காட்ட அவர்கள் இருவரது செருப்புக் கால்களுக்கிடையில் அவரை நிறுத்திக் காட்டுவதும் டைரக்டரின் திறமையான 'டெக்னிக்' முறைகளாகும்.

நடிப்பு:

"வேலைக்காரி" படத்தின் வாயிலாகத் தோழர் கே. ஆர். ராமசாமி இதுவரை சிற்சில படங்களில் தாம் அடைந்திருந்த இழிவை நீக்கிக் கொண்டதோடு, தமிழ்நாட்டு நடிகர் வரிசையில் ஓர் ஒப்பற்ற தனி இடத்தைத் தேடிககொண்டார் என்றே கூற வேண்டும். 'மனோகரன்' நாடகத்தில் அவரது நடிப்புப்பலராலும்பாராட்டப்பட்டுள்ளது. ஆனால் வேலைக்காரி'படத்தைப்பார்த்தால்அதைவிடப் பலநூறுமடங்கு அவரது நடிப்புத்திறன் உயர்ந்துள்ளது தெளிவாகும். அப்பழுக்கற்ற நடிப்பு, அருமையான வேஷப் பொருத்தம், தெளிவான உச்சரிப்பு, இனியசாரீரம்இவைகளால்தோழர்ராமசாமி நமது உள்ளத்தில் நீங்கா இடம் பெறுகிறார். படத்தின் வேகமும், விறுவிறுப்பும் எப்படிப் போகப்போக உச்சநிலைக்கு ஏறுகிறதோ, அதுபோலவே அவரது நடிப்பும் ஏறுவரிசையில் உச்ச நிலைக்குப் போய்க் கொண்டே இருக்கிறது. தந்தையின் பிணத்தைக் கண்டு புலம்புதல், கடன் வாங்கி வாழ வழியின்றித் தவித்தல், காளியிடம் முதலில் பக்தியுடன் மனமுருகல், பின் ஆவேசத்துடன் காளி கோயிலில் அவளைக் கேள்விமேல் கேள்வி கேட்டு அலங்கோலப்படுத்தல், உடன் மெய் சோர்ந்து ஓய்ந்து உட்கார்ந்து மனமயக்கம் தெளிதல், பரமானந்தனாக மாறிப் படாடோபமாக இருத்தல், மனைவியையும், மாமனாரையும் வேதனைப்படுத்துதல், கோர்ட்டில் வடநாட்டு வக்கீலாகத் தோன்றி வாதாடுதல், இறுதியில் தன சுயரூபத்தை வெளிப்படுத்துதல் போன்ற பல இடங்களில் அவரது அபாரமான நடிப்புத் திறனைக் கண்டு வியக்காமலிருக்க முடியவில்லை. இப்படத்தின் மூலம் அவர் அடைந்துள்ள ஒப்பற்ற புகழை நிலை நிறுத்த, அவர் இனிப் புராணப் படங்களில் நடிக்கக் கூடாது என்பதே நமது விருப்பம்.

அடுத்தபடியாக நமது கவனத்தைக் கவர்பவர் தோழர் டி. எஸ். பாலையா. இவர் ஒரு தலை சிறந்த குண சித்திர நடிகர். இருப்பினும் "வேலைக்காரி" படத்தில்வரும் மணி யென்ற பாத்திரம் இவருக்காக அமைந்தது போலவே உள்ளது. முதலிலிருந்து கடைசி வரை அநாயாசமாக நடித்து நம்மைக் களிப்புக் கடலில் ஆழ்த்திவிடுகிறார். பராரி ஆனந்தனைப் பணக்காரப் பரமானந்தனாக மாற்றி அவனை ஆடம்பரமாக இரு என்று போதனை புரியும்போதும், வேதாசலத்தைப் பழி வாங்க, அடுத்துக் கெடுக்கும் படலம், பணம் பாழாகும் படலம், மானம் பறிக்கும் படலம், கண் குத்துப் படலம், பழி தீர்க்கும் படலம் என்று திட்டம் வகுத்து அவைகளை விளக்கும் போதும் அற்புதமாக நடித்திருக்கிறார்.

மூர்த்தியாக நடிக்கும் தோழர் நம்பியார் ஒரு நல்ல நடிகர். எனினும் காதல் கட்டங்களிலெல்லாம் அவரது முகபாவம் அவரை மோசம் செய்து விடுகிறது. ஹரிஹரதாஸ் வேடத்தில் அவர் நடிப்புப் பரவாயில்லை. ஆனால் இதை இன்னும் கொஞ்சம் விளக்கிக் காட்டியிருக்கலாம்.

வேதாசல முதலியாராக நடிக்கும் டி. பாலசுப்பிரமணியம், முருகேசனாக நடிக்கும் தோழர் டி. பி. பொன்னுசாமிப் பிள்ளை, பர்மா பாலுவாக நடிக்கும் புளிமூட்டை ராமசாமி, சுந்தரம் பிள்ளையாக நடிக்கும் முஸ்தபா ஆகியோர் இயற்கையாகவும் பொருத்தமாகவும் நடித்துள்ளனர்.

நாடகமேடை நகைச்சுவை நடிகர்களான தோழர்கள் பி. எஸ். தட்சணாமூர்த்தி, எம். என். கிருஷ்ணன் ஆகியோர் நன்கு நடித்துள்ளனர். இதர சில்லரை நடிகர்களும் சிறப்பாக நடித்திருக்கின்றனர்.

வேலைக்காரியாக நடிக்கும் தோழியர் எம்.வி.ராஜம்மா, அகம்பாவி சரசாவாகநடிக்கும்தோழியர் வி.என்.ஜானகி இருவரும்ஏற்றபாத்திரத்தையுணர்ந்து திறமையுடன் நடித்திருக்கிறார்கள். இதர நடிகைகளும் பரவாயில்லை.

லலிதா பத்மினி நடனம் உயர்தரம்.

பொதுவாக எல்லா நடிகர்களுமே இப்படத்தில் புது முயற்சியுடன் நடித்திருப்பது போற்றத்தக்கதாகும்.

குறைகள் சில.

படத்தின் நீளம் 16,774 அடியாகும். இதில் ஏறக்குறைய முதல் முக்கால் மணி நேரம் படத்தில் வேகமில்லை. மந்தமாகஇருக்கிறது. ஆனால் போகப் போக "டெம்போ" அதிகரித்துக் கொண்டே சென்று படத்தின் இறுதிக் கட்டத்தில் உச்ச நிலையை அடைந்து விடுகிறது. முற்பகுதியில் ஆனந்தன் தந்தையின் பிணத்தைக் கண்டு அலறும்போதுமட்டும் உணர்ச்சியுடன் காணப்படுகிறது. ஆரம்பத்திலிருந்து முதற் பகுதி முழுதும் வெறும் பாட்டுகளாயிருப்பதும் காட்சிகள் மளமளவெனக் காட்டப்படுவதும் முதல்பாகம் மந்தமாக இருப்பதற்குக் காரணமாகலாம். வேலைக்காரி அமிர்தத்தைப் பெண் பார்க்க வருபவர்கள் மாப்பிள்ளையின் தம்பியும், தங்கையும் என்று கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் நடந்துகொள்ளும் முறை கணவனும் மனைவியும்போல். இது சரியல்ல.

நம்கருத்து.

விரிவஞ்சி மேலும் "வேலைக்காரி" பற்றி விளக்கம் கூறாமல் இத்துடன் விடுக்கிறோம். சுருக்கமாகக்கூற வேண்டுமானால் நமது தமிழ் நாட்டுக்குத் தேவையான முறையில் எடுக்கப்பட்டுள்ள தமிழ்ப்படங்களில் இது மூன்றாவதாகும். முதல் படமான பைத்தியக்காரனைப்பற்றி முன்பு ஒரு முறை இப்பகுதியில் எழுதியுள்ளோம். இரண்டாவதாக வெளிவந்த "நல்ல தம்பி" குறித்து அடுத்தவாரம் எழுதுவோம்.

சீர்திருத்தம் விரும்புவோர், சங்கீதத்தை ரசிப்போர், வசனங்களை மனப்பாடம் செய்வோர் கலையழகு காண்போர், நடனம் விழைவோர், பொழுதுபோக்க எண்ணுவோர், நகைச்சுவைவேண்டுவோர் முதலிய பல திறத்தவரும் குடும்பத்துடன், ஒன்றுக்குப் பல முறையாகக் காண வேண்டிய படம் "வேலைக்காரி"

மேலும் சட்டசபையில் மடங்களின் ஊழல்பற்றிப் பிரதமமந்திரியார் முதல் வேதாத்தினம்பிள்ளைவரை பேசக்கூடிய இந்த வேளையில் அரசாங்கத்தாரின் மடத் திருத்த மசோதாவுக்கு ஆதரவாக, மடங்களின் நிலைமை தெளிவாக்கப்படுகிறது 'வேலைக்காரி'யில்.

திராவிட மக்கள் அனைவரும் இப்படத்தை ஆதரித்துப் பெருமைப்படுத்துவதன் வாயிலாகப் புராணப் படத் தயாரிப்பாளர் இனி அச்செயலை விட்டொழிக்குமாறு புத்தி புகட்டவேண்டும் என்பதே நம் வேண்டுகோள்.

—எஸ். கருணானந்தம்.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

றியிருக்கலாம்! அவள் திருடினாள்! என்னைக் கேட்டிருக்கலாம்; அவள் கருகிய வாழ்வின் மறுமலர்ச்சிக்கு முயலும் எனக்கு மேலும் தொந்தரவுகூடாது என்று எண்ணியிருக்கலாம். ஆகவே அவள் திருடினாள். திருடினாள், மன்றமும் ஏறினாள். தப்பும் வழியில்லையா? ஏனில்லை தண்டனை இருக்கிறதே! தண்டனையின்றி தப்பும் வழியில்லையா? ஏனில்லை...! அவள் பெண்மை இருக்கிறதே!

பெண்மை! ஆம் பெண்மையை பயன் படுத்தினால் தப்பமுடியும். பயன் படுத்தியும் விட்டாள், விடுதலை கிடைத்தது. அவள் பெண்மையைப் பணயம் கேட்டோன் மணப்பதாகக் கூறினான். ஒப்புக் கொண்டாள். இது எனக்குத் தெரிந்தால்...?

அவள் யாது நினைத்தாளோ, தெரியாது. என்னிடம் கூறினாள். "உம்மோடுள்ள என் தொடர்பை நான் அறுத்துக் கொள்ள விரும்புகிறேன். ஏன் தெரியுமா? என்னை கருகிய மலரோடு நீர் ஒப்பிட்டீரல்லவா....?" மேலே ஏதோ கூற முயன்றாள்.

"சரி! உண்மையைகூறியதுதவறு போலும்!" என்று அவளைத்தடுத்துக் கூறினேன்; உணர்ச்சியோடல்ல, வேதனையோடு—முயற்சியின் முடிவான வேதனையோடு. நான்குபேர் முன்னிலையில் நான் இவ்விதம் கூறியது அவள் உள்ளத்தை கோபத்தால் நிரப்பி விட்டது. கோபத்தில் வஞ்சம் தீர்க்க முயன்றாள்.

"இவன் புரட்சிக்காரன்!" என்றாள் அலுவலகத்தில். புரட்சிக்கு அந்த வேலையில்லை. அவன் பணியினின்றும் பயணம் கட்டிக் கொள்ளச் செய்யப்பட்டது.

புரட்சிக்காரன்! ஆம்! நானோர் புரட்சிக்காரன். கருகிய மலருக்கு மறுமலர்ச்சியளிப்பது ஓர் புரட்சி தான். அதில் தோல்வியுறுவதும் ஓர் புரட்சிபோலும்!

அவன் சுசீலாவை மணந்து கொண்டான். மாங்கல்யத் தாலல்ல, பதிவினாலல்ல; அவளுக்கு அவனால் கொடுக்கப்பட்ட குழந்தையால்.

ஆனால் அவள் வாழ்வு இன்பத்தோடு அமைந்ததோ?

அவளின் பழைய வாடிக்கைக்காரர்கள் அவளை மறக்கவில்லை. அவள் உணர்ச்சியும் மங்கவில்லை. பலன் அவனிடமிருந்து நீக்கப்பட்டாள். அவன் பணியும் முடிந்தது, போய்விட்டான்.

"கணவனுக்குத் துரோகம் செய்தாள்?" சமுதாயம் குற்றம் சாட்டியது.

அவள்? கருகிய மலர்! சமுதாயத்தின் பலவற்றில் ஒன்று. அவள் வாழ்வு கருகுவதற்கு அவளேதான் காரணமா? ஓரளவு இருக்கலாம். ஆனால் அவ்வழியின்றி வேறுவழி அமைக்காத குற்றம் யாருடையது? சமுதாயத்துடையதுதானே!

ஆம்! சமுதாயம் பழமை என்னும் மூடக்கொள்கையின் கருகிய சருகு. அதிலே தோன்றிய கருகிய மலருள் சுசீலா ஒருத்தி.

---

(3ம் பககத்தொடாச்சி)

இராஜன்:- நான் எதை என்று எண்ணித் தொடங்குவேன்? விமலாவை இந்த நிலையில் காணும் என் மூளையும் குழம்புகிறதே....?

வேவா:- சரி! அப்படியானால், நீயும் ஒரு பைத்தியம் மாதிரியே போய்விடு. இருவரும் என்றும் பிரியாமலாவதிருப்பீர்கள்...

[என்று கூறிவிட்டு முதலியார், பத்மாவோடு விலகிச்செல்கிறான்]

இராஜன்:- ஆம்! என்றும் பிரியோம்! நாம்...இனி...இன்பமுடன் வாழ்வோமே...! விமலா! அன்றொரு நாள்...மாலையிலே! அந்தச் சோலையிலே! நம் இருவரையும் ஒருவராக்கிய...ஓர் இன்னிசை...!!! 'என்றும் பிரியோம்...' பாடு...! பாடுவிமலா!! ஊம். பாடுவோம் விமலா...!!! 'என்றும் பிரியோம் நாம் இனி இன்பமுடன் வாழ்வோமே...' பாடு...பாடு விமலா...பாடு! பாடு!! பாடு!!!

விமலா:- [ராஜனைக் கூர்ந்து நோக்குகிறாள்! கொஞ்சம் கொஞ்சமாகப் புத்தி சுவாதீனம் அடைந்து]

ஆ! ராஜ்! [என்று அலறுகிறாள். கண்ணில் நீர் மளமளவென்று கொட்டுகிறது.]

ராஜன்:-ஆம். விமலா! நான் உன் ராஜனேதான்! பாடு! பாடுவோமா......

[பாட்டு]

இருவரும்:-என்றும் பிரியோம்
நாம்-இனி இன்பமுடன்
வாழ்வோமே... (எ)
உயிர் ஒன்றாம் உணர்வமே
உண்டிரண்டிடலாமே... (எ)

விமலா:-கூறும்பேரின்பமே
வேறே எது ஆகுமோ?

இராஜன்:-வீண் வேதமே ஓதுவார் அன்பே அறிந்திடாரே (எ)

விமலா:-கட்டிநீர் அணைந்திடும்
முத்தம் ஒன்றேனும்
பெற்றாலன்றோ...சற்றேயவர்
மாண்பே பெறாரே
மகாத்துறவி என்பாரே (எ)

இராஜன்:-என்னே சிறிதான
இன்பமோ
நாமே புரிகாதலே

விமலா:-பேரின்ப மன்றோ
காதலே
பேதமே சொல்வா
ருண்டோ... (எ)

முதலியார் & வேவா } [இருவரும் முக மலர்ச்சியோடு அந்து வருகின்றனர்.

விமலா:-[அப்பா வருவதுகண்டு நாணி இராஜனை விட்டு விலகுகிறாள்]

முதலியார்:-விமலா! இப்படி வாம்மா!! உங்கள் காதல் மறுமலர்ச்சி அடைந்தது கண்டு என் மனமும் மிக்க மகிழ்ச்சி அடைகின்றது. ராஜனுக்கும், உனக்கும், இம்மலர் வனத்திலேயே மறுமணம் செய்து வைத்து என்மனப்பூர்வமாக உங்கள் உண்மைக் காதலை வாழ்த்துகிறேன்!

[என்று கூறி இருவருக்கும் மலர் மாலைகள் சூட்டிக் கரங்களை இணைத்து வைத்து]

மலரும், மணமும் போல் நீடூழி காலம் சகல சம்பத்தும் பெற்று வாழ்வீர்களாக!

புதிய தம்பதிகள்:- [முதலியாரை வணங்குகின்றனர்]

முதலியார்:- வாழ்க நீடூழி!! [என்று ஆசீர்வதித்து விட்டு வேவாவை நோக்கி]

பார்த்தீரா! கருத்தொருமித்த இக்காதலர்களைப் பிரித்து, மீண்டும் இணைத்து வைத்த விதியின் சுழலை! என்னென்பது...?

வேவா:- [ஆச்சரியமாக] ஆ! மூட மக்களின மடமையால்விளையும் பலனுக்கும், இடையறாது உழைக்கும் உழைப்பாளிகளின் இணையிலாத ஆற்றலின் பலனுக்கும் நீங்களும், உங்களைப் போன்றவர்களும் முடிவாகச் சூட்டும் பெயர் 'விதியின் சுழலா?'

[முற்றிற்று]

# ஆணும் பெண்ணும்!

★

மனிதன் பலகோடி ஆண்டுகளாக இன்னலுடன் போரிட்டுப், போரிட்டு இயற்கையுடன் உழன்று வந்திருக்கின்றான். அவன் இன்னல் வலுத்து, போர் முறையும் மாறமாற—உருவ நிலையும் மாற மாற அவன் மூளையும் ஆற்றிற்கு ஏற்ப வளர்ச்சியுற்றே வந்திருக்கின்றது. மூளை வளர்ச்சியின் பலனாலேயே மிருக நிலையைக் களைந்து மனித நிலையை அடையலுற்றான்.

அவன் எவ்வளவோ இன்னலுடன் உழன்றாங்கூட, தன் இனப் பெருக்கம் செய்யாது விடுத்தானில்லை. ஆக, அவன் இனம் தழைப்புற்றே வந்தது. அவ்வினப் பெருக்கத்திற்காகவே குடும்பம் என்பது இயற்கையில் விளைந்ததாயிருத்தல் வேண்டும்.

எவ்வளவோ இன்னலுக்கிடையேயும் இனவிருத்தியை செய்ய—இயற்கையின் வேட்கையை தணிக்க, எங்கோ, எப்படியோ பிறந்து வளர்ந்த ஆணும், பெண்ணும் ஒன்று கூடியிருக்க வேண்டும். யாருக்குப் பிறந்து, எங்ஙனம் வளர்ந்தோம் என்ற சரிதமறியா இருவர் கூடல் நிகழ்வது அதிசயமுள்ளதாகாது. யாருன் அப்பனும், அம்மையும்? எங்கே பிறந்து, எங்ஙனம் வளர்ந்தாய்? என்று அந்த மனிதன் தன்னோடு கலந்த பெண்ணைக் கேட்டிருக்க முடியாது. பெண்ணுக்கும் அப்படியே கேட்கத் தோன்றியிருக்காது. அவர்களின் காதல், தடைவிதிக்க முடியாத இயற்கையுடன் கலந்து இருக்க வேண்டும்.

பரந்த விண்ணிலே, முகிற் கூட்டம் அழகுடன் பொலிய; இனிய காற்றைத் தவழச் செய்ய மரங்கள் சிலிர்ப்ப, சிலிர்ப்பில் சிதறிய மலர்கள் இயற்கையில் ஒன்று கலந்த அக்காதலர் மேற்சொரிய, அவர்கள் இன்பக் காதலும், இனிய ஊடலும், நிகழ்த்தி மகிழ்ந்திருக்கக் கூடும். அச்சமயத்தே அவர்கள், குடும்பத்தைப் பற்றியோ, குடும்பத்தை நிர்வகிக்கும் பொறுப்பைப்பற்றியோ கவலை கொண்டவர்களாயிருந்திருக்க முடியாது. கவலையற்ற காதலர்கள்; இன்னலற்ற இன்பம்; இனிமையின் சிகரம்!

காலப் போக்கில் அவர்கள் காதல், கனியீந்தும் நிலையில் காலடி எடுத்து வைத்தது. கவலையற்றுக் கனிவுறக் களித்த காதல், அக்காதலர் காக்கில் குழவி ஒன்றைக் கொடுத்துச் சிறப்பித்தது. அக்குழவியை அவர்கள் மகிழ்வுடன் ஏற்று கனிவுடன் வளர்த்தனர். அவர்கள் அக்குழவிதனை அன்புடன் பேணியிராதிருந்தால், மனித சமுதாயம் இன்று பூண்டோடு புன்மையுற்றிருக்கும்.

எங்கோ எப்படியோ தோன்றி வளர்ந்த இருவர், ஒரு முனையில் சேர்ந்து இன்பம் அநுபவித்த பின், பிரிந்து சென்று போய் விட்டிருப்பாரா? அன்றி ஒன்று கூடி மனையறம் நடாத்தியிருப்பாரா? இவை சிந்தித்து, நுணுகி அறிதற்பாலது.

ஒரு முனையில், அன்புக்கணையில் அயர்ந்தோர், ஒன்றுபட்டே வாழ்வு நடாத்தியிருக்கவேண்டும். பெண் விரும்பிய ஆணுடனும், ஆண் விரும்பிய பெண்ணுடனும், சேர்ந்து வாழ்ந்திருக்க வேண்டும். இல்லமில்லை; வாழ்ந்தனர். அறிவில்லை; அன்பு பேணினர். இன்னல் நிறைந்த இயற்கைநிலை; இன்பம் பெற்று மகிழ்ந்தனர்—வாழ்ந்தனர். இயற்கையும் அதையே காட்சி கொடுத்தது—கொடுக்கிறது.

மிருகங்கள் ஆண் பெண்ணாக ஒன்றி வாழ்கின்றன. பறவை இனமும், அதே முறை கொண்டுள்ளது. புழு, பூச்சி என்ற அனைத்தின் வாழ்விலும் ஆணும் பெண்ணும் ஒன்றி, இன்பம் நுகர்ந்த பின்னும், பிரியாது பிணைந்து வாழ்கின்றன. ஆகவே படிப்படியே உள்ளவை சிறந்த நிலையில் வந்த மனித முதலினமும் அங்ஙனமே வாழ்ந்திருக்க வேண்டும்.

ஒத்த முறையில், ஒத்த உரிமையுடன் ஒன்றிய அக்காதலர் வாழ்வில், இயல்பான ஒரு சில நிலை ஏற்பட்டது! அந்நிலையே ஆணுயரவும், பெண் தாழவுமான நிலையிற் கொண்டு விடுத்திருக்கக்கூடும். நிலைமையைச்சரிபடபயனுறுத்திக் கொண்ட ஆணறிவைப் புகழ்வது, எதிர்நோக்கியிராத நேரத்து எதிரியை வென்ற போர் மறவனின் இழிச்செயலைப் புகழ்வது போன்றதேயாகும்.

களிப்புடன் கலந்த காதலி சூல் கொள்ள, வயிறு புடைத்து முன்னே வந்துற்றதால், இன்னல் சிறிது அடைந்தே இருப்பாள் வலி பொறுக்காது, நடக்க வலியற்று ஓரிடத்திலேயே அமர்ந்து விடும் நிலைக்கு அவள் வந்திருப்பாள். தன் உணவைத் தானே நாடி, ஓடி, தேடி அடைந்து உண்டு, வயிறு வளர்த்த பெண், வயிற்றிலே பாரமேற நடக்க வலிவற்று, தன்னுணவைத் தன் காதலன் கொணர்ந்துகொடுக்கும் நிலையில், அதைப் பெற்று உண்ணும் நிலைமைக்கு வந்தாள். குழவி ஈனும்—ஈன்ற நேரத்தில் வெளிச் சென்று இரை தேட வசதியற்ற பெண் உயிருக்கு, ஆணுயிரே இரை தேடிக் கொடுக்கும் காட்சியை இயற்கை காண்பிக்கின்றது. பறவை இனத்திலே காணலாம், அன்றாட வாழ்வில். குட்டி ஈன்ற பெண் புலி பசித்திருக்கக் கண்ட ஆண் புலி அதற்குணவு கொண்டுவர வெளியே கர்ஜனையுடன் செல்லும் நிலையை, நம் சங்க இலக்கியப் படத்தில் காட்சியாக—கற்பனையாகக் காணலாம்—படிக்கலாம்! இந்த நிலையையே எவ்வியற்கை உயிரினும் காண்கிறோம். ஆக, குழவி ஈன்ற மனிதப் பெண்ணுக்கும், ஆண் இங்ஙனமே பசியோம்பி இருந்திருப்பான். அதே, இன்று ஆண்தான் பெண்ணுக்கு உணவு தேடிக் கொடுக்க வேண்டும் என்ற சமுதாய நிலையாக—நியதியாக மாறி இருக்கவேண்டும்.

குழவிப்பருவத்திற்குப்பின்பெற்றோரிடமிருந்து தூரதூரச்சென்று உயிர் தப்பி வாழ, தனித்திருந்த மனிதன், எல்லா இன்னலிடமிருந்தும்வெளியேற, போரிடவேண்டியவனாயிருந்தான். புலாலுண்ணும் மிருகங்களிடமிருந்து, நஞ்சுடைய அரவங்களிடமிருந்து, கொட்டும் தேள்களிடமிருந்து,

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

இரத்த முறுஞ்சும் காடிகளிடமிருந்து, நச்சுக்கிருமி, உயிரழிக்கும் பல உயிரினங்களிடமிருந்து தப்ப அவன் போரிட்டு வந்தான்- (வந்தாள்.) தனித்தே தன்னுயிருக்காக மட்டும் போரிட்டு வந்த பெண்ணுயிர், தன்னுடன் இன்னொருஇன்னுயிரைக்காப்பாற்றும் பொறுப்பை ஏற்கவேண்டிய நிலையாய், இயற்கை நியதியாக இருப்பதை உணர்ந்தாள். உணர, அப்பொறுப்பு எவ்வளவு இன்னலுடையது என்பதையும் கண்டாள். கண்டு வெதும்பினாள் வருந்தினாள். ஆயினும் குழவியை இழக்க அவள் இயற்கை மனம் ஒப்பியிருக்காது.

அறிந்தோ, அறியாமலோ, விரும்பியோ, அல்லாமலோ அவனும் அவளுடன் அவ்வின்னுயிரை காப்பாற்றும் பொறுப்பில் ஈடுபட்டிருந்தான். பிடரியிலே கோப்பையளவு மூளையுடன், உடலிலே உடையின்றி, உள்ளத்திலே யத்துடன், கண்களிலே களிப்பின்றி கவலையுடன், நடுங்கும் கரங்களிலே குழவியேந்திச் சென்ற— வாழ்ந்த நாள் எப்படிப்பட்ட பயங்கரமுடையது, என்பது கவனித்தற்பாலது. வானளாவ நின்ற மரங்களடியிலே இருக்கும் சந்து பொந்துகளிலே, அடர்ந்த புல்லும், பூண்டும் பழுதும், விழுதும் குழுமிய புதர்களிலே, தன் இரவு வாழ்வைக்கழிக்க அதைஇல்லமாக அமைத்து, பயந்து, ஊர்ந்து வாழ்ந்த உயிரினம் எவ்வகைத்தது என்பது ஓர்ந்து உணர்தற்பாலது.

எத்தனையோ இன்னல்களிடமிருந்து தப்பி உயிர்வாழ விரும்பினான் மனிதன். தன்னுடன் ஒன்றிய துணைவியுடன், அவ்வின்னல்களைந்து இன்ப வாழ்விற்கு விழைந்தான். ஆகவே, அவன் அவளையும், அவளீன்ற குழவியையும், தானேற்ற இன்னலுடன் போரிட, முன்வந்தான். நடுங்கும் கரத்திலே தாங்கிச் செல்லும் குழவியோடு, தன்னுயிருக்கும், தானீன்ற குழவியினுயிருக்கும், எதிர்ப்படும் இன்னலை எதிர்த்துப் போரிடும் நிலையிலிருக்கவில்லை அப்பெண். தன்னுயிருக்கும், துணைவி, குழவி உயிருக்கும் வரும் இன்னல்களை எதிர்க்க அந்த மூதாதை மனிதன் போரிட்டிருக்கவேண்டும். போரிட்டுக்காப்பாற்றியும் இருக்கின்றான்.

இரு உயிரையும் காப்பாற்றும் பொறுப்பேற்ற அம்மூதாதை வீரன், அவர்களுக்கு வழிமுறை அமைத்திருப்பான். ஆகவே, அவன் அவ்விரு உயிர்களுக்குத் தலைவனானான். மூவுயிர்க்குடும்பத்துக்கு அவனே அதிபதி!

இங்ஙனமே ஆண் குடும்பத்துக்குத் தலைவனாகவும், பெண் தன் நிலை சிறிது சிறிதாக மறந்து அடிமைப்படவுமான நிலை ஏற்பட்டிருக்கக்கூடும்.

மூதாதைப் பெண், தன் காதலனுடன் சேருமுன் தனித்து, இன்னலை எதிர்த்து, வீராங்கனையாகவே வாழ்ந்தாள். ஆனால், பின் தான் குழவி ஈன்று, இன்னலை எதிர்க்க வசதியற்றபோது, தன் காதலன் உதவியைத் தேவையாக ஏற்றாள். தேவையான உதவியை வேதாந்தம் பேசாத அம்மூதாதை வீரன் கொடுத்ததால்தான், இன்று நாமும், நம் வேதாந்திகளும் வாழ நேர்ந்தது! எப்படியும் அவன், நிலைமைக்கு உதவி செய்யப்போக அதிகார பீடம் கைப்பற்றவும், பெண் உரிமை இழக்கவுமான நிலை ஏற்பட்டது.

ஆகவே குடும்பம் ஏற்பட்டு அதில், ஆண் தலைவன் பீடம் ஏறி, 'நானே குடும்பத் தலைவன்' என்று பேசும் இன்றைய நிலையும், பெண்ணடிமை ஏற்பட்ட நிலையும் இப்படியாகவே ஏற்பட்டு இருக்க வேண்டும்.

"மா. சு. நெடுஞ்சேரலாதன்"

---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கத் தக்க சந்தர்ப்பத்தை வழக்கம் போலவே உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டி, அவளுடன் பகலென்றும் பிறிதென்றும் பாராமல் புணரவேண்டுமென எண்ணினான். சீதையும் உடன்பட்டுக் காமக்களியாட்டங்களில் ஈடுபட்டுப் பிறகு, இராமன் வருவதற்குரிய நேரமாக இருந்ததால், எழுந்து மற்ற விஷயங்களைக் கவனிக்கப்புறப்படவே, விமானத்திலிருந்து இவர்களிருவரையும் கண்டுவிட்ட இலங்கை வேந்தன், இராமனும் இவர்களுடனேயே இருப்பானாதலால், இராமனைப் போருக்கழைக்க எண்ணி கீழே இறங்கினான். தன் கணவனுக்குக் கட்டாயம் ஆபத்து வரக்கூடுமெனத் தெரிந்த சீதை, இலக்குமணனை ஓடிப் போய் இராமனை அவ்விடம் வரவொட்டாமல் செய்யும்படி கெஞ்சினாள். இராமன் இல்லாததைக் கண்டு மனம் வெதும்பிய இலங்கை வேந்தன், தான் சீதையைச் சிறைப்பிடிக்கப் போவதாகத் தெரிவித்து, இலக்குமணனைத் தோற்று ஓடச் செய்தான்; பிறகு சீதையை விமானத்திலேற்றிக் கொண்டு, இலங்கைக்குத் திரும்பினான்.

அப்பொழுதுதான் இராவணனை நன்றாகப் பார்த்தாள் சீதை. அவன் அழகையும் கம்பீரத்தையும் கண்டு அவன்மீது காதல் கொண்டாள். அன்று இலக்குமணனுடன் சேர்ந்த பொழுது உண்டான உணர்ச்சி, அடங்காமல், பீறிட்டுக்கொண்டு வெளிவரும்போலத் தோன்றியதால் இராவணனை மெதுவாக வசப்படுத்த எண்ணினாள். அவள் கோபிகா ஸ்திரீயானாள். (பாரதக் கதையிலே, நிர்வாணமாக நீராடிக்கொண்டிருந்தவர், கண்ணனுடன், அவன் குழல் ஊதவும், அவ்வணங்குகள் அலங்கோலமாக ஆடினார்களாமே, அதுபோல நாட்டியமாட ஆரம்பித்துவிட்டாள்.) இவ்வளவு இழிவான செய்கையைக் கொண்ட இவளா அரச குடும்பத்தில் பிறந்திருக்கிறாள்' என எண்ணி வருந்தினான் இராவணன். இந்நிலையைப் போற்றும் இவ்வினத்தவர், வாலியை எங்ஙனம் வென்றிருக்கவேண்டுமென எண்ணி ஏங்கிப் புலம்பினான்.

விமானத்தில் போகும்பொழுது தம் விருப்பத்திற்கு இராவணன் இசையாததால் வெறுப்புக்கொண்ட சீதை, தாம் இராவணனையே முழுதும் நேசிப்பதாகக் காண்பித்துக் கொள்ளும்பொருட்டு, மற்றவர் ஆசையுடன் அளித்திருந்த அணிகளை அகற்றி எறிந்தாள். இவள் நிலையைக் காணச் சகிக்காத இராவணன், தான் அணிந்திருந்த மேலாடையை அவள்மேல் போடவும்; அதை அகமகிழ்வுடன் பெற்றுக்கொண்டாள் சீதை. விமானத்தில் தவறிவந்து மோதிய பறவையின் இறகு ஒடிந்து, கீழே அது விழவே இறந்து பட்டது. (கதையில் சடாயு என்று பறவைக்குப் பெயர் கொடுத்து, தம் கற்பனையையும் தீட்டினார் வால்மீகி.]

"இவளோ என் தங்கையை அவமானப்படுத்தினவனின் மனைவி. ஆனால் விபசாரத்தைக் குடும்பப் பெண் வேடத்திலேயே பரிபூர்ணமாகச் செய்கிறாள். இவளையும் நான் அவமானப் படுத்தினால், என்னை, என்னினத்தை, என் நாட்டை நானே அவமானப்படுத்தியது போலவன்றோ ஆகும். எதிரியின் மனைவியானால் என்ன. இவளையும் திருத்துவதன்மூலம் நம் கடமையைச் செய்வோம். நீதியிலும் நேர்மையிலும் சிறிதும் வழுவாத, தன்

மானத் திராவிடத் தனி அரசன் இலங்கை வேந்தன் என்பதை உலகுக்கும் உணர்த்துவோம். இராமனை அவன் வாலியைக் கொன்றதைப் போலன்றி, நேருக்கு நேர் பொருது வெற்றி கொள்வோம். சீதை என் இராஜ்யத்திலேயே அரசியல் கைதியாக இருப்பதும் பொருத்தமானது'' என வெண்ணி அவ்வண்ணமே அவளையும் கௌரவித்து, சிறிதும் ஒழுங்கு தவறாமல், பிறரும் தவறும்படி சந்தர்ப்பம் ஏற்படாமல் தற்காத்து வந்தான், சீதையின் கண்ணீருக்குக் கலங்கி நன் மாண்பை இழந்துவிடாத இலங்கை வேந்தன் இராவணன்.

பிறன் மனைவியை (அவள் விபசாரம் மேற்கொண்டிருந்தாலும் சரியே) சிறைப்படுத்தியது ஓர் விதத்தில் தவறு என்ற ஒரு சிறு கருத்து வேறுபாட்டைக் கும்பகர்ணன் கொண்டிருந்தாலும், இராவணனின் உயர்ந்த இலட்சியங்களில் முழு நம்பிக்கையுள்ளவனாதலால், அண்ணனுக்கு இடையூறு செய்யாமல், அவனோடு சேர்ந்து, எதிரியின் படைகளுடன் போரிட்டு முடிவில் கொல்லப்பட்டான், விபீஷணன் சூழ்ச்சியால். (விபீஷணனே கொல்லவில்லை என்பதை மறந்து விடக்கூடாது.)

இராவணன் கருத்துக்கு முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டு சீதையிடம் கள்ளக் காதல் கொண்டவன் விபீஷணன் ஒருவனே. தன் நோக்கத்துக்கு அண்ணன் எதிர்ப்பாக இருந்ததால், தான் இராவணன் நிலையிலிருந்தால், தன் விருப்பம் போல் சீதையை அடையலாமென்று கருதி, அவனை வீழ்த்தப் பல சதிகள் செய்துவரலானான். தன் நோக்கம் ஈடேறுமெனத் தனக்கு நம்பிக்கை ஏற்படவும், சீதையை அனுமன் காணவந்தபொழுது அவளிடம் அனுமனை அழைத்துச்சென்று (சதிகளின் மூலம்) தன் நோக்கத்தையும் சீதைக்குத் தன்னிடமிருந்த ஆசையையும் கூறி, இராவணனை வீழ்த்துவதற்கு முதல் கூறுபாட்டை எடுத்து இயம்பி, அதை இராமனுக்குத் தெரியப்படுத்தும்படி சொன்னான். எடுத்த எடுப்பிலேயே பாதி வெற்றி காண எண்ணி இலங்கையை எரியூட்டினான், அனுமன் துணைகொண்டு. (அனுமன் பிடிபட்டு அரச மன்றத்தில் நிறுத்தப்பட்டபோது, இராவணன் அவனைக் கொல்லும்படி கட்டளையிட, தூதுவரைக் கொல்லுவது முறையாகாது என நீதி பேசிய விபீஷணன் சூழ்ச்சியை, இலங்கை வேந்தன் ஆராயாமல் ஏமாந்தான். தன் உடன் பிறந்தவன் தனக்கே தீங்கு செய்வானென்று, இராவணனின் எண்ணவே முடியாத திராவிடர் இன ஒழுக்கமல்லவா இதற்குக் காரணம்.)

வாலி எவ்விதமாகக் கொல்லப்பட்டானோ, அதைவிட வஞ்சகமாக வீழ்த்தப்பட்டான் இராவணன். முதல் நாட்போரில் தோற்று நிராயுதபாணியாக ஆன இராமனை, அன்றே கைது செய்து வெற்றி விழாக் கொண்டாடியிருக்கலாம், அல்லது, வில்லம்பு அல்லது வாள் கொடுத்து மீண்டும் அவனுடன் பொருது, அவனைக் கொன்றிருக்க முடியும், இராவணனால். இராமன் கோழையாகையால், அதைச் செய்யவில்லை. மீண்டும் எதிரிக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென எண்ணியதற்கு மற்றொரு முக்கியமான காரணம், சீதையை அடைய வேண்டி, இராமனைப் பின் தள்ளி, விபீடணன் நேருக்குநேர் போர் செய்ததுதான். எனவே 'இன்று சென்று நாளைவா' எனச் செப்பி அனுப்பினான இராமனை.

விபீஷணனைத் தான் கொன்றால், தன் இனமே தன்னை எதிர்காலத்தில் தூற்றுமே எனக் கருதினான் இராவணன். எனவே கொல்லாதிருந்தான். தன் பாணம் விபீடணன் மேல் பட்டு விடாமல், அவன் விடும் ஆயுதங்களைத் தடுக்கும் போர் செய்ய நேர்ந்ததால், இராமனுடன் சரிவர கைகலக்க முடியவில்லை. ஆரிய இராமன், வாலியைக் கொன்றொழித்தது போலவே, இராவணனையும் ஒழித்தால் தான் முடியும், இல்லை என்றால் அத் திராவிட வீரனை வெற்றிகொள்ள முடியாது எனத் தெரிந்து தந்திரமாகச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். தக்க சமயத்தில் விபீஷணனும் காட்டிக் கொடுக்கவே, இராவணனும் கீழே சாய்ந்தான். (இங்கே இராவணனையும் அவன் தம்பி விபீடணன் கொல்லாதிருந்தது கவனிக்கப்பட வேண்டியது.)

இறப்பதற்கு முன்பு தன்னைக் காணவந்த விபீடணனை இராவணன், "நன்று செய்தனை தம்பி விபீடணா! தமிழகம் தேய்ந்து, தமிழர் கலாச்சாரம் அழிவதற்கு; ஆரியனின் ஏவலனாக நீயும் இருந்தனையோ" என்று கூறிக் கதறினான்.

இதற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு, எதற்கும் கலங்காத வீரன் ஜூலியஸ்சீஸர், தான் குத்தப்பட்ட பின்பு, புரூடஸூம் சதியில் கலந்து கொண்டான என்பதைத் தெரிந்ததும் "நீ கூடவா புரூடஸ்" என்று கதறினானே, அது இராவணன் வரலாற்றை, மாவீரன் ஜூலியஸ்சீஸர் கருத்துடன் படித்திருந்ததின் எதிரொலியோ??

இதுவே, இவ்விருவீரர்களின் இறுதி வாழ்வு!

அந்த புரூடஸாவது, ரோம்நாட்டு நலனுக்காகவே தான் 'தகாத அச்செயலைச் செய்ததாகக் கூறினான். ஆனால் விபீடணன் ஒரு ஆரியப் பெண்ணை, அண்ணன் தம்பி இருவருக்கும் பத்தினியாக இருந்தவளை, பல பேரைக் கலந்திருக்க வேண்டுமென்று ஊகித்துக் கொள்ளக்கூடிய நிலையில் இருந்த—சீதையை அடைவதற்கு இராவணனைக் கொல்லச் சதி செய்து, வெற்றி பெற்று, சீதையை அடைந்து, அதன் அடையாளமாகச் சீதை காப்பவதியாகிக் காட்டில் தவிக்கப்படவும், பிறகு லவ குசர்களை அங்கே, காட்டிலேயே, பெற்றெடுக்கவுமான இழி தொழிலை செய்தானல்லனோ! இதைவிட மானங்கெட்ட செய்கையை, எந்தத் தன்மானத் தமிழனாவது, செய்வானா? செய்ய வேண்டுமென்றாவது நினைப்பானா? அல்லது கனவாவது காண்பானா? ஆகையினாலே தான் திராவிட இனத்தைக் காட்டிக் கொடுப்பவர்களை விபீஷணர்கள் என்று திராவிடர் அழைக்கின்றனர் போலும்!

* *

மேற்கண்ட கருத்துக்களடங்கிய உண்மையை, சுந்தரமய்யர் தம்மனைவி கனகத்திடம் கூறினார். அவசரமாக அம்மாவால் அழைத்துவர வேண்டுமென்ற கட்டளையை ஏற்று "அம்மாமி"யை அழைத்துச் செல்லவந்த நான், இலங்கைவேந்தன் இராவணனின் உண்மை வரலாற்றினையும் அறிந்து கொண்டேன்.

'சீதையின் கற்பு' எது வென்பது எனக்குப் புரிந்தது. உங்களுக்கும் ஏற்கனவே தெரிந்திருக்கலாம். அது அவாதிரகம்; நம் மினத்திலே, அதைவிட கேவலமான விபசாரம் இருப்பதற்கில்லை. என்னே!! "சீதையின் கற்பு"!!??

சந்திரா.

## சமஸ்கிருதமும் கட்டாயம்!

பல்கலைக் கழகங்களில் சமஸ்கிருதத்தைக் கட்டாய பாடமாக்குவது பற்றி இந்திய சர்க்கார் யோசித்து வருகின்றனர்.

இதற்குப் பல்கலைக்கழகக் கமிஷனின் சிபாரிசைக் கேட்டிருக்கிறார்கள்.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE.